# பாதுகாவலன்

PATHUKAVALAN


சிறுகதை எழுத்தாளரை ஊக்குவிக்க வாசகர்களிடம் கருத்துக்கணிப்புப் பெற்று பரிசில்கள் வழங்கவுள்ளோம். இவ்வாண்டு வெளியான சிறுகதைகளில் அதி சிறந்த ஐந்து கதைகளை நிரல்பட தெரிந்தெடுத்து தபால் அட்டை மூலம் அ. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். இறுதி நாள் மே 10.


மலர்: 116 இதழ் : 14 20-4-1990 (ஏப்ரல் 20 — ஏப்ரல் 27) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு விலை ரூபா 2/=


★ கேரளாவில் ஒரு குடும்பத்தில் பத்துப்பிள்ளைகளை இறைபணிக்கு அர்ப்பணித்து குருத்துவ உருவாக்கல் ஆண்டில் மாபெரும் சாதனை!

# ஒரு குடும்பத்தில் 6 குருக்கள் 4 கன்னியர்

# 14 பிள்ளைகளில் பதின்மர் இறைவனுக்கு

இந்தியாவில், கோட்டமங்கலம் மறைவட்டத்தில் ஒரு கத்தோலிக்க குடும்பம் பதினான்கு பிள்ளைகளில் பத்துப் பிள்ளைகளை இறை ஊழியத்துக்கு அர்ப்பணித்துள்ளது. மறைவட்ட ஆயர் பேரருள்திரு. ஜோர்ஜ் "ஆண்டவரின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களைப் பெற்றெடுத்த பெற்றோர் பாக்கியம் பெற்றவர்கள்" என்றார்.

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் திருமணமான லூக்காஸ் தம்பதிகள் ஒரு சில கத்தோலிக்க குடும்பங்களுக்கு மட்டும் இடைக்கும்பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டனர்.

பதினான்கு பிள்ளைகளில் ஒரு மகனும், ஒரு மகளும் மட்டும் திருமணமாகியுள்ளனர். கடைசி மகள் கல்லூரிப் படிப்பைத் தொடர கடைசி மகன் நோய்வாய்ப்பட்டவராக ஐந்து ஆண்டுகளாகப் பாயும் படுக்கையுமாயுள்ளார்.

இவ்வாண்டு ஜனவரி 4 ஆம் திகதி இரண்டு புதல்வர்கள் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டபோது மறையுரையாற்றிய ஆயர் பேரருள்திரு. ஜோர்ஜ், பாக்கியம் பெற்ற குடும்பத்தைப் பாராட்டினார்.

குடும்பத்திலுள்ள ஆறு குருக்களுள் மூவர் கோட்டமங்கல மறைவட்டக் குருக்களாகப் பணிபுரிகின்றனர். கன்னியர் மூவர் சென்னையில் இறை ஊழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மறையுரையில் மறைவட்ட ஆயர் இக்குடும்பமானது கிறிக்கெட் ஆட்டக்காரரைப்போல் 6, 4 பெற்று சாதனை புரிந்துள்ளதெனப் பாராட்டினார்.

## வத்திக்கான் நிதி நிலைமை

வத்திக்கானில் இவ்வாண்டு வரவு செலவுத்திட்டத்தில் மிகப்பெரிய பற்றாக்குறை ஏற்படக்கூடுமென்று திருப்பீடத்தின் நிதித்துறை அறிவித்துள்ளது. நன்கொடைகள் இன்னும் அதிகமாகப் பெருகினாலன்றி இவ்வாண்டின் பொருளாதாரக் குறையைச் சீர்செய்வது கடினம் என்று வெளியிடப்பட்ட வத்திக்கான் பொருளாதார அறிக்கை உரைக்கிறது. இவ்வாண்டிற்கான செலவென்று 15 கோடியே 24 இலட்சம் டாலர் தொகை கணக்கிடப்பட்டது என்றும் ஆனால் வரவென்று 6 கோடியே 65 இலட்சம் டாலர் தொகைமாத்திரமே கிடைக்கப்பட்டிருப்பதால் 8 கோடியே 60 இலட்சம் டாலர் தொகை நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்றும் திருப்பீடத்தின் பொருளாதார நிலை பற்றிய 3 நாள் கூட்டத்தில் கலந்துகொண்ட கருதினால்கள் கூறினர்.

## குருக்களுக்கு சீரமைப்புக் கல்வி

சீனாவில் அரசினால் அங்கீகாரம் பெற்ற திருச்சபைகளுக்கு மட்டுமே சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. சீனாவில் திருத்தந்தைக்கு விசுவாசமாயிருக்கும் கத்தோலிக்க குருக்களுக்கெதிராய் கடுமையான நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு எடுக்கவிருப்பதாக சீனக் கமினியூசியக் கட்சியில் 12 பக்கங்கள் அடங்கிய ஏடு கூறுகிறது. திருத்தந்தைக்குப் பிரமாணிக்கமாயிக்கும் குருக்களுக்கு சீரமைப்புக் கல்வி புகட்டி அச்சமயத்தில் அரசின் கொள்கைகளுக்கு ஒத்திணங்கிச் செல்லாதவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாகக் கூறப்பட்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## கருக்கலைப்பைத் தடுக்க தண்டனையிலும் அறிவுரை சிறந்தது

அரசியலில் ஈடுபட்டுள்ள கத்தோலிக்கர்கள், சமுதாயத்தில் கருக்கலைப்பு நடவடிக்கைகளைக் குறைக்க முயற்சிக்க வேண்டுமென்று சிக்காகோ பேராயர் கருதினால் யோசப் பேர்னடின் கேட்டுக்கொண்டார். கருத்து வேற்றுமைகளைக்களைவதற்குத் தண்டிப்பு நடவடிக்கைகளை விட ஒழுக்க முறையிலான அறிவுரைகளே பயன் மிக்கதாய் இருக்கும் என்ற திருச்சபையின் கோட்பாட்டை மனதிற் கொண்டிருக்க வேண்டுமென்றும் வாஷிங்டன் நகரின் 'ஜோச் ஸ்டான்' பல்கலைக் கழகத்தில் உரையாற்றிய கருதினால் பேர்னாடின் கூறினார்.

அப்பாவி மனித உயிர் ஒன்றின் வாழ்க்கைப் பிரச்சனையில் அதற்கெதிராக எந்தக் கத்தோலிக்கரும் தீர்மானம் எடுக்கக்கூடாது என்று சென்ற நவம்பர் திங்களில் அமெரிக்க ஆயர் பேரவை வெளியிட்ட அறிக்கையையும் கருதினால் வாஷிங்டன் மக்களுக்கு நினைவுறுத்தினார். ஆயர் பேரவையின் அறிக்கைக்கு ஏற்றாற் போல் கருக்கலைப்பது நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தி இன்னும் கருவிலிருக்கும் குழந்தைகளின் உரிமைகளைக்காப்பதற்கும் பொதுப்பணியில் ஈடுபட்டுள்ளோர் முயற்சிக்க வேண்டுமென்று தான் கேட்டுக்கொள்வதாகவும் சிக்காகோ பேராயர் கூறினார்.

## கருச்சிதைவுக்குக் கண்டனம்

அமெரிக்காவில் கருக்கலைப்பு செய்வதற்கும் சட்ட மாற்றத்திற்கு கண்டனம் தெரிவித்து அம்மாவட்ட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கடிதம் எழுதியுள்ளார், நியூயோக் பேராயர் கருதினால் யான் ஒக்கலா சென்ற நவம்பர் திங்களில் ஆயர் பேரவையில், வாழ்வுக்கு ஆதரவான பிரிவு சார்ந்தவராகப் பதவி ஏற்றது முதல் இவர் சட்டமாவட்டத்திற்கு எழுதியுள்ள முதல் கடிதத்தில் கருக்கலைப்பினால் விளையும் தீமைகளை விளக்கிக்கூறியுள்ளதுடன் 8 மாதக் கருவின் படமொன்றையும் தன் கடிதத்துடன் இணைத்துள்ளார். கரு

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## மடுத்திருவிழா — 06-05-1990

மடு அன்னையின் அன்புப் பக்தர்களே!

மடுத்திருப்பதியில் வைகாசி மாதத் திருவிழா வைகாசி மாதம் 6ஆம் நாள் இடம்பெறவுள்ளது. அதற்கான ஆயத்தவழிபாடுகள் 3 ந் திகதி ஆரம்பமாகும். திருநாள் திருப்பலி 6-ந் திகதி காலை 6-30 மணிக்கு ஆரம்பமாகும்.

அருட்திரு. பி. ஜேசுறாஜா,
பரிபாலகர்,

மடுத்திருப்பதி.

## சீனத் திருச்சபையை மதிக்கவேண்டும்

சீனாவில் திருச்சபையினர் கைதுசெய்யப்பட்டதற்கு எதிர்ப்புத்தெரிவித்து ஹொங்கொங் திருச்சபையினர் எழுந்ததைத் தொடர்ந்து ஹொங்கொங் கத்தோலிக்கர்கள் சீனக் கத்தோலிக்கர்களுடன் உறவு கொள்வதற்கு மூன்று விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சீன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பிறரை அடிமைப்படுத்தாது இருக்க வேண்டும், பிறர் நடவடிக்கைகளில் தலையீடு செய்யாதிருக்க வேண்டும், ஒருவருக்கொருவர் மதிப்புக் கொடுத்து வாழவேண்டும் என்ற ஹொங்கொங் அரசியலமைப்பில் குறிக்கப்பட்டிருக்கும் 3 விதிகள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் சீனாவின் மதத்துறைத் தலைவர் றென் முன்பு தெரிவித்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம்கருத்து

### அருட்சி

இம்முறை தவக்காலத்திலும், குறிப்பாக பரிசுத்த வாரத்திலும் கிறிஸ்தவர்கள் பக்தியுள்ள முறையில் திருப்பாடுகளைத் தியானித்துப் பயன்பெறத் தக்க விதத்தில் பல பங்குகளில் திருப்பாடுகளின் காட்சிகள் இடம்பெற்றன.

பல பங்குகளிலே கன்னி முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட திருப்பாடுகளின் காட்சி அருட்சி ஊட்டுவதாக அமைந்தமை சிறப்பம்சமாகும்.

இவை அனைத்துக்கும் சென்றிருந்த மக்களின் எண்ணிக்கையும், அதில் அவர்கள் பங்குகொண்ட விதமும் பெருமிதத்துக்குரியவை.

இலகு முறையில் எளிய நடையில் கிறிஸ்துவின் போதனைகளை மக்கள் முன் வைக்கும் ஊடகமாக ஆரம்பிக்கப்பட்ட இத்திருப்பாடுகளின் காட்சி இடைப்பட்ட காலத்தில் வெறும் பராக்குக்குரிய செயலாக மட்டும் மேடையேற்றப்பட்டமை, சலிப்பூட்டின என்பதையும் நாம் நினைவில் கொள்ளுகிறோம்.

ஆனால் அத்தகைய நிலைமாறி தனிமனிதருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலையிலிருந்து விலகி, தமது படைப்பைத் தன்நலம் மறந்தவர்களாக முன் வைத்தமை பயன்பாட்டைப் பெருக்கின என்று கூற முடியும்.

மறைக்கல்விப் போதனை, வேத அறிவு, இறைவார்த்தைகளைச் செவிமடுக்கும் பழக்கம் எல்லா மக்களுக்கும் சமமாகக் கிடைப்பதில்லை. ஏராளமான மக்கள் கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றியும் போதனைகளைப் பற்றியும் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். இத்தகைய மக்களுக்கு சாதாரணமுறையிலே, எளிய நடையிலே இறைவார்த்தைகளை ஊட்டுகின்ற ஊடகமாக இம்முறை திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்பட்டமை போற்றுதற்குரியதாகும்.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு பராக்குகள் மக்களின் சிந்தனைகளைத் திசைதிருப்பி, நேரத்தை விரயமாக்குவதுடன், வாழ்க்கையையும் வீணாக்கச் செய்கின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு பழம் பெருமை படைத்த திருப்பாடுகளின் காட்சிகளை அவற்றிற்கே உரிய அருட்சியுடன் மேடையேற்றும்போது மக்களின் சிந்தனைகள் ஒரு முகப்படுத்தப்படுவதோடு, வாழ்க்கையும் வளம் பெறும்.

நீண்ட இடைவெளிக்குப்பின் இம்முறை மக்கள் திருப்பாடுகளின் காட்சியில் பங்குகொள்ள வாய்ப்புக் கிடைத்தமை அதன் புனிதத்துவத்தை பாதுகாக்கக் காரணமாயிருந்தது என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

இதே பங்குகளில் இக்காட்சிகள் மீளமேடையேற்றப்படுமாயின் இவற்றின் தன்மைகள் சிதைவுபடக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்பதில் வியப்பில்லை.

பாத்திரங்களுக்குப்போட்டி, அமைப்புக்களில் புதுமை, பழக்க தோஷம், இவை அனைத்தும் அருட்சியைப் பெருக்குவதற்குப் பதிலாக பாவத்தைப் பெருக்கும் என்றே கூறவேண்டும்.

இத்தகைய பாதிப்புகள் திருப்பாடுகளின் காட்சியை மாசுபடுத்தாதிருக்க பொறுப்புள்ளவர்கள் கரிசனை எடுத்துக் கொள்ளவேண்டும்.

பெயரும், புகழும் பெருமையும் தேடமுற்படுவது முதலாவது சத்துராதி. புதுமைகளைப் புகுத்துவது அடிப்படைநோக்கத்தை நிறைவேற்றத் தவறிவிடும். பழக்கதோசத்தைப் போக்க ஆண்டுதோறும் அதே மக்கள் மேடையேற்றாதிருப்பது தான் ஒரே வழி.

கன்னி முயற்சிசெய்து மேடையேற்றிய பங்குகள், பிற பங்குகளிலும் அதே ஒத்துழைப்பைக் கொடுத்து திறம்பட ஆற்றிட முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்து ஈடுபாட்டை உண்டாக்க முடியும்.

## பத்திமா மாதா இன்றிச் சமாதானமா?

முதல் உலகயுத்தம் 1914-1918 3வது, வருடமாக நடந்த போது வரப்பிரசாதத்தின் மத்தியஸ்தியாகிய அன்னை மரியாளை நோக்கி உலகெங்கும் வேண்டுதல் செய்யும்படி திருத்தந்தை 15ஆம் ஆசீர்வாதப்பர் உலக ஆயர் அனைவருக்கும் 1917ஆம் ஆண்டு வைகாசி 5-ம் நாள் அனுப்பிய விண்ணப்பத்தின் பதிலாக மோட்சத்தில் இருந்து கிடைத்த மறுமொழி மிகவும் அற்புதமானது! எட்டு நாட்களுக்குப் பின் வைகாசி 13ஆம் திகதி பத்திமா என்னும் குக்கிராமத்தில் ஆடு மேய்க்கும் மூன்று சிறுவர்களுக்கு மரியன்னை கொடுத்த காட்சிகளும் அறிவித்தல்களும், செய்த புதுமைகளும், முதலாம் உலகப்போர் முடிவடைந்ததும் மரியன்னை அளித்த அற்புத பதிலின் ஒரு எடுத்துக் காட்டு எனலாம். இவ் ஆரம்பவரலாறு பத்திமா செய்தியின் கருப்பொருளை கணிக்கத் தக்கதாகவே அமைகின்றது.

ஜெனோவா சீமாம்பிள்ளை

மேற்கண்டவாறு உயிலங்குளம் றோ. க. த. கலவன் பாடசாலை மாணவி ஜெனோவா சீமாம்பிள்ளை பத்திமா காட்சிகளின் ஆரம்பம் பற்றி ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவலை அனுப்பி எம் எல்லோருடைய பாராட்டுக்கும் உரியவளாகிறாள். இம் மாணவியின் சாதனை எனக்கு பெரும் அதிர்ச்சியைத்தந்தது. ஏனெனில் இதற்கு முன் இத்தகவல் என்னை அடைய வெகு காலம் சென்றதுமல்லாமல் வேற்று மொழியிலும், வெகுதூரம் இருந்தும் வந்தது. உயிலங்குளத்தில் இருந்து இவ் ஆரம்ப உரை வந்ததுமன்னார் மாவட்டத்துக்கு பெருமை தருவதாகும். செல்வி. ஜெனோவா இத்தகவலை எங்கிருந்து எவ்வாறு பெற்றுக் கொண்டா என்று அறிய விரும்புவதுடன் இத்தகைய வேறு ஆய்வுக்குதவும் கருத்துக்களையும் எதிர்பார்க்கிறேன், ''பத்திமா மாதா இன்றிச் சமாதானமா'' என்ற ஆய்வுக்கு இவ் ஆரம்ப வரலாறு எவ்வாறு உதவும் எனப்பின்னர் காண்போம். அனுப்புபவரின் பெயரும் முகவரியும் தெளிவாக இருக்கட்டும். அனுப்ப வேண்டிய முகவரி.

அருள் தந்தை.
ஜோ. அ. கருணாகரர்
தியான இல்லம்
பண்டத்தரிப்பு

---

பூமிக்கு ஈர்ப்பு சக்தி இருந்த போதிலும் வானில் பறக்கும் பறவைகளை அதனால் ஈர்க்க முடியாது, அவ்வாறே உலகுக்கு ஏமாற்றிக் கவரும் வல்லமை இருக்கின்றபோதிலும், தூய ஆவியின் வல்லமையால் நடத்தப் படும் உத்தமனை மயக்க முடியாது.

## 1990களை நோக்கி.......

## தூரத்துப்பார்வை

## அமதிகள் மாநாடு

3 இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.

கரவையூர்ச் செல்வம்

போர்க்காலம்

குட்டக்குட்ட குனிந்த தமிழர், 1970 களில் ஆங்காங்கே குனிய மறுத்து வந்தாலும், 1983ஆம் ஆண்டுடன் இனிக் ''குனியவே மாட்டோம்'' என்று கூறுவது போல, இருபத்தேழு ஆண்டுகளாக அடித்து உதைத்து சித்திரவதை செய்து கொலைகள் செய்து வந்த சிங்கள அரசை எதிர்த்து தமிழ் இளைஞர் போர் தொடுத்தனர். ஈழத்து அண்மைக்கால வரலாற்றில்நாம் காணாத கொடிய போரிது. பலத்த உயிர்ச் சேதத்தையும், பொருள் சேதத்தையும் அனுபவித்து. இன்று 1990இல் இன்னுமோர் திருப்பு முனையில் நாம் நிற்கின்றோம். 'சோ' என்று பெய்த அடைமழை ஓய்ந்துவிட்டாலும், தூவானம் இன்னமும் நிற்கவில்லை. மேலெழுந்த வாரியான ஓர் அமைதி எமது பகுதிகளில் தோன்றினாலும், இந்த அமைதிக்குப் பின்னால் ஒரு பேய்க்காற்று வீசுமா என்றபீதி மக்கள் மனத்தில் உறுத்தாமல் இல்லை.

இடைக்காலம்

கடந்த ஏழாண்டுப் போரின் பின்னர் ஈழத்தமிழராகிய நாம் இன்னுமோர் கால கட்டத்தை எதிர் நோக்குகின்றோம். இந்த ஏழாண்டுப் போர் எம்மை நன்கு பாதித்துள்ளது. எமது சிந்தனை, எதிர்பார்ப்பு, சமூக நோக்கு, வழிபாட்டு வாழ்வு, கலைகலாச்சாரம், வாழ்க்கை முறை முதலானவற்றை இப் போரின் தாக்கங்கள் பாதித்துள்ளன. இந்த இடைக்கால மாற்றத்தில் நாம் ஓர் இழப்பை அனுபவிக்கின்றோம். பழமை இனித் திரும்பி வராது. அந்த ''நல்ல காலம்'' (good old days) இனித் திரும்பி வராது. இந்த இழப்பு ஒரு சாவின் விளைவு. இந்தச் சாவை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சாவினால் ஏற்படும் இழப்பையும் நாம் ஏற்றுக்கொண்டு, இந்த இழப்பிற்கு நாம் கண்ணீர் விடத்தான் வேண்டும். அதே வேளை இந்த இழப்பை இழப்பாக விட்டுவிடவேண்டும். இது, ஓர் ஆரோக்கியமான உளவியல் அணுகுமுறை, மனித வளர்ச்சிக்கு வேண்டிய நிலைப்பாடு.

எதிர்காலத்தின் தோன்றல்கள் திட்டவட்டமான முடிவுகளைத் தராதபொழுது ஏற்படும் பாதுகாப்பின்மையினால் ஓர் அங்கலாய்ப்பு, ஒரு பதட்ட நிலை தோன்றுவதுஇயல்பு. ஆனால், இப்படிப்பட்ட ஓர் அங்கலாய்ப்பையும், பதட்ட நிலையையும் நாம் ஏற்றுக்கொள்வோமானால், அத்துடன் எதிர்காலத்தின் பாதுகாப்பின்மையையும் நாம் ஏற்றுக்கொள்வோமானால், ஓர் புதிய வாழ்விற்கு உயிர்ப்பிற்கு நாம் வழிகோலலாம். சாவும் உயிர்ப்பும் வாழ்க்கையின் நியதிகள். அமதிகள் பழமை சிலவற்றிற்கு செத்து 90களின் சவால்களுக்கு உயிர்க்க வேண்டும். கிறீத்துவின் சாவும் உயிர்ப்பும் தரும் முக்கியமான கிறீத்தவச் செய்தி, இது.

1990 இல் காலடி வைத்துநிற்கும் அமதிகள் இப்படிப்பட்ட ஒரு காலச்சூழலில் நின்று கொண்டுதான் 90 களை நோக்க வேண்டும். வரலாற்றுப் பின்னணியையும் இந்த இடைக்கால அங்கலாய்ப்பையும், அடுத்து வரும் காலத்தின் திட்டவட்டமில்லாத ஒரு சூழலையும் அதனால் ஏற்றுக்கொண்டு எதிர்காலத்தை அமதிகள் நோக்குவார்களானால், அமதிகள் மாநாடு அர்த்தமுள்ளதாகவும் பயன்உள்ள தாகவும் மலரும்-உயிர்க்கும்,

(வளரும்)

## இளவாலையில் தூதுவர்

திருத்தந்தையின் தூதுவர் ''அருட்திரு. பிரான்சுவா பக்கே'' இளவாலை மறைவட்டாரத்திற்கு வந்து சேர்ந்த போது- தமிழ்ப் பண்பாட்டின்படி தீப தூப நைவேத்தியங்களினால் மங்கல, இசை, வாத்தியங்கள் முழங்க ''நில பாவாடை'' நீட்டி நிற்க, இன மதபேதமின்றி அனைத்து மக்களும் வெண்மஞ்சள் கொடிகளை ஏந்தியவர்களாக அவரை வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

யாழ். ஆயர், அதி. வந். தியோகுப்பிள்ளை ஆண்டகையுடன் ஏனைய குருக்கள்,

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

# உயிர்ப்பு

## சிறுகதை

"அம்மா, செத்துப்போன என்னுடைய அப்பாவும் திரும்ப் வருவாராம்மா? மழலைக் குரலில் கேட்ட தன் ஒரே மகனான ஜோனை திடுக்குற்றவளாய் ஏற இறங்கப் பார்த்தாள் தெரேசா. இது என்ன, என்றுமே இல்லாமல் இன்று திடீரென இப்படி ஒரு கேள்வியைத் தன் ஆறு வயது நிரம்பிய மகன் கேட்குமளவிற்கு நடந்தது என்ன, என ஒன்றுமே அறியாதவளாய் திகைத்து நின்றவளை" சொல்லுங்கம்மா, அப்பா வருவாரா, எப்ப வருவார்;" என மீண்டும் கேட்ட தன் மகனின் கேள்வியினால் சுயநினைவு பெற்றாள்.

தன் மகனிற்கு அவனுடைய அப்பா செத்துப் போய் விட்டார், கடவுளிடம் போய் விட்டார் என்றுதான் இத்தனை காலமாகக் கூறி இருந்தாள் தெரேசா. தான் தாயாகக் காரணமாகி, தன் குழந்தையின் முகத்தைக் கூடப்பார்க்க விரும்பாதவனாய் வயிற்றில் குழந்தையுடனேயே சொல்லாமல் கொள்ளாமல், தன்னைத் தவிக்க விட்டுவிட்டு இன்னொருத்தியுடன் ஓடிப் போய் விட்டதன் கணவனை நினைக்கும் போது உண்மையிலேயே அவன் இறந்திருந்திருந்தால் கூட நல்லது என்று தான் நினைத்துக் கொள்வாள்.

சுற்றம், சூழலின் கேலிப் பேச்சுக்களுக்கும், ஏளனப் பார்வைகளுக்கும் ஈடுகொடுக்க விரும்பாதவளாய் அறிமுகமே இல்லாத அந்த ஊரிற்கு வந்து அழகான ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்து கடந்த ஆறு வருடங்களாக எதுவித சலனமுமில்லாமல் தன் காலத்தைக் கழித்து விட்டாள். அவளது உயிர் மூச்சே தன் குழந்தைதான். தன் கடந்த கால வாழ்க்கையில் தான்பட்ட அவமானங்கள், துன்பங்கள், வேதனைகள் எதுவுமே தன் மகனிற்குத் தெரியக்கூடாது, அவன் நிழலைக்கூட எதுவுமே தீண்டக்கூடாது என்பதில் மிகக் கண்ணும் கருத்துமாய் இருந்தாள் தனது துயரங்கள் எல்லாவற்றையுமே, தன் அன்பு மகனின் ஒவ்வொரு செயல்களிலும் மறந்தாள். அவளது ஒரே இலட்சியம் தன் மகனை உயர்ந்த ஓர் ஸ்தானத்திற்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதுதான். இதற்காக இன்னும் எத்தனை துன்பங்கள் வந்தாலும் அவள் தாங்கத் தயாராக இருந்தாள்.

முதன் முறையாக "உங்கள் அப்பா செத்துப் போய் விட்டார்" என்று மகனிடம் கூறும் போது அவளிற்கு மனதிற்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. தங்கள் நினைவே இல்லாமல், எங்கோ ஓர் இடத்தில் இன்னொருத்தியுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருப்பவரை இறந்தவராக எண்ணுவது பாவமில்லை எனக் கருதினாள். இதனால்தான் தன் குழந்தைக்கும் அதையே கூறி இருந்தாள். ஆறு வயதுக் குழந்தைதானே, தன் அப்பா கடவுளிடம் போய் விட்டார் எனஎதுவித சஞ்சலமுமின்றி இருந்தவனைத் திடீரென இப்படிக் கேள்விகேட்க வைத்தது என்ன?

பலவாறாகச் சிந்தித்தவள் தன் மகனின் பிஞ்சு மனம் ஏமாறக்கூடாது என்பதற்காக "கட்டாயம், உங்கள் அப்பா கெதியில் திரும்பி வந்துவிடுவார்" என்று கூறி வைத்தாள்.

"நாளைக்கு வருவாரா?" மகன் விடுவதாக இல்லை. மகன் இதைப்பற்றிய சிந்தனையிலேயே இருப்பதால் நிச்சயமாக ஏதோ ஒன்று இதற்குத் தூண்டுகோலாய் இருக்க வேண்டும் என எண்ணி அதை அறிய விரும்பியவளாய் "ஏன் மகனே, இப்படிக் கேட்கிறீங்க? யார் இப்படிக் கேட்கச் சொன்னது?" என மகனை அணைத்தபடியே கேட்டாள். "ஆண்டவர் செத்துப்போய் திரும்ப எழும்பி வந்தாராம். அதுதானாம் ஈஸ்டர் நாளாம், இப்பிடித்தான் செத்துப்போன எல்லாரும் திரும்ப வருவாங்களாம், எண்ட ஸ்கூல்ல படிச்சுக் கொடுக்கிற மதர் சொல்லிக் கொடுத்தா. அப்ப எங்கட அப்பாவும் வருவார்தானே, என்னம்மா?" ஆவலோடு முகத்தைப் பார்த்த குழந்தையிடம் "அப்பாவும் வருவார்தான்" என்று கூறினாள். மீண்டும் அந்தக் கசப்பான நினைவுகளை அசைபோட விரும்பாதவளாய் மகனின் சிந்தனையைத் திசை திருப்பும் பொருட்டு, வேறு பேச்சைத் தொடங்கினாள்.

✻✻✻✻✻✻✻✻✻✻✻

விடிந்தால் ஈஸ்டர் திருநாள் இரவு 12 மணிக்கு மகனுடன் பூசைக்குப் போகிறாள் தெரேசா. அங்கே கல்லறையின் நின்று உயிர் பெற்று எழுந்து நிறை ஆண்டவரையே கண் கொட்டாமல் மகன் பார்ப்பதை தெரேசா கவனிக்கிறாள். ஒருவேளை 'தனது தந்தையும் சீக்கிரம் உயிர் பெற்று வந்துவிட வேண்டுமென்று அந்தப் பிஞ்சு மனம் ஆண்டவனிடம் வேண்டுகிறதோ என்னவோ' மனதுள் நினைத்தவளாய், ஆண்டவன் காப்பாற்றுவார். தம்மை வழிநடத்துவார் என்ற நம்பிக்கையோடு பூசைமுடிந்து மகனுடன் வீடு திரும்புகிறாள். மகனிற்கு ஏதோ ஒரு உற்சாகம். வழிநெடுகலும், கோவில் பாடிய பாட்டுக்களையும், சொல்லிய செபங்களையும் அரைகுறையாக தன் மொழியில் சொல்லிக் கொண்டே வருகிறான்.

வீட்டை நெருங்க நெருங்க வாசலில் யாரோ ஒருவர் நிற்பது புலனாகிறது. நெருங்கியதும் சிறிது அச்சத்துடன் வெளிச்சத்தில் உற்று நோக்குகிறாள். சந்தேகமேயில்லை. அது தன் கணவனேதான் என்பதை அறிந்து கொள்கிறாள். இந்த ஆறு வருடங்களில்தான் எத்தனை மாற்றம். பழைய கம்பீரமில்லை. ஆடம்பரமான ஆடையில்லை. ஒரு பிச்சைக்காரனைப் போன்ற நிலை. கண்கள் கண்ணீரைக் கொட்டுகின்றன. நொடிப் பொழுதில் தெரேசாவிற்கு எல்லாமே விளங்கி விட்டது. நம்பிப் போனவள் ஏமாற்றி விட்டதால், ஏமாற்றி விட்டவளிடம் வந்திருக்கும் நிலை.

தெரேசாவின் முன் நிழற்படம் போன்று கடந்தகாலம் ஓடி மறைகின்றது. இதே மனிதனால் அவள் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள், அவமானங்கள், வேதனையான வாழ்க்கை. உடலில் பலம் கையில் பணம் இருக்கும் போது தன்னைத் துச்சமாக மதித்துச் சென்ற அதே மனிதன் எதுவுமே அற்ற நிலையில் தன் ஆதரவு தேடி வந்திருப்பதைக் காண்கிறாள். அவரை ஆதரிப்பதா, இல்லை உன்னை எமக்குத் தேவையேயில்லை என்று விரட்டி விடுவதா, யோசிக்கிறாள். தொடர்ந்து வந்த துன்பங்களால் இறுகிப் போய்விட்ட மனம் அவரை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. வீட்டினுள் சென்று கதவைச் சாத்திவிடும் எண்ணத்துடன் மகனின் கையை இறுகப் பற்றிக் கொண்டு உள்ளே செல்ல அடி எடுத்து வைக்கிறாள்.

பாட்டுப் பாடிய மகன் திடீரென "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே" என்று தன் கொச்சை மொழியில் ஆரம்பிக்கிறான். எத்தனையோ தடவைகள் தெரேசாவும் சொல்லி விட்ட செபம் தான் அது. "எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல் எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் அந்த வரிகள், தெரேசா சிந்திக்கிறாள், நான் அர்த்தத்துடன், முழு மனதுடன்தான் அதைச் சொல்லுகிறேனா?.. எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுக்காவிட்டால், எங்கள் பாவங்களை மட்டும் ஆண்டவன் பொறுத்தருளுவார் என்று எப்படி என்னால் எதிர் பார்க்க முடியும்? வெறும் வாயிலிருந்து வரும் வார்த்தைகள்தானா அவை? இல்லை இல்லை, எனது இந்த வார்த்தைகள் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். தெரேசா ஈற்றில் தீர்மானிக்கிறாள்.

"தவறு செய்த ஒருவன் அதற்காகக் கண்ணீர் வடிக்கத் தெரிந்தவனாக இருந்தால் அவன் தவறே செய்யாதவனிலும் உயர்ந்தவன்"

யாரோ கூறிய வார்த்தைகள். மனதில் உறுதியான தீர்மானத்துடன் 'யாரம்மா இது' என்று செபம் முடித்து கேள்வி கேட்ட தன் மகனிடம் "உங்கள் அப்பா வந்து விட்டார்" எனக் கூறி ஆதரவுடன் கணவனைப் பார்க்கிறாள்.

(யாவும் கற்பனையல்ல)

கிறிஸ்ரா ஜானகி P.
நல்லாயன் இல்லம்
மாங்குளம்

✻✻✻✻✻✻✻✻✻✻✻

# இறைமகன் உயிர்த்தெழுந்தார்

அன்பை என்றும் பொழிந்து வந்தார்
அகிலமெல்லாம் இயேசு பிரான்
துன்பம் கொடுத்தனர் பரிசேயர்
தூயவர் அவருக் கெதிராக
வன்மம் கொண்டு சிலுவையிலே
வாட்டி வதைத்தனர் அவருடலை
மென்மை உயிரும் பிரிந்ததுவே
யேட்டிமை கொண்டது யூதர் கும்பல்

கடவுளுக்கும் ஒரு கல்லறை
கல்லறைக்கு மங்கே காவலர்கள்
அடக்கிவிட்டால் முடங்கிடுமா
அன்பு அகிம்சை இவையெல்லாம்?
புடமிடப் பொன்னும தீயினுக்குள்
புகுந்திட வேண்டும் நியதியிது
அடக்கம் புது உயிர்க்கெல்லாம்
தொடக்கம் என்பதை அறியீரோ?

வித்து அழிந்து போவதெல்லாம் — புது
விளைபயிர் மீண்டும் பிறப்பதற்கே
பொன்னும் உருகிப் போவதெல்லாம் புது
நகையாய்ப் பிறந்து ஜொலிப்பதற்கே
கல்லறைகள் உயிர்ப்பதெல்லாம் — புது
காவியங்கள் பிறப்பதற்கே
இறைமகன் உயிர்த்து எழுந்தாரே — புது
வாழ்வினை எமக்குக் கொடுப்பதற்கே.

அ. பீற்றர் ராஜன் யாழ். மறைக்கல்வி நிலையம்

# மக்கள் குரல்

ஆசிரியர் அவர்களே!

பல ஆண்டுகளாக நாட்டிற்கு வெளியே நான் வாழ்ந்து வந்தாலும், நாட்டில் நடைபெறும் நிகழ்வுகளையும், எமது யாழ்ப்பாணத் திருச்சபையின் வளர்ச்சியையும், 'பாதுகாவலன்' மூலமாகக் கவனித்து வருகிறேன்.

அண்மைக் காலங்களில், எமது குருக்கள் மேற்படிப்பை மேற்கொண்டு, பட்டங்களுடன் திரும்புவது எமது திருச்சபையின் வளர்ச்சியைக் குறித்துக் காட்டுகிறது இருப்பினும் அவர்கள் பட்டங்களைப் பெற்றாலும், குருக்களாகவே இருக்கிறார்கள். பட்டதாரிகளாக இருந்தாலும், எமது ஆன்மீக வழிகாட்டிகளாகவே இருக்கிறார்கள் அவர்கள் திறமையான வழிகாட்டிகளாக இருப்பதற்காகவே மேற்படிப்புகளை மேற்கொள்ளுகிறார்கள். மேற்படிப்பில் பெற்றுக்கொண்ட அறிவுத்திறனை தங்கள் பணிக்கு பயன்படுத்த அழைக்கப்படுகின்றார்கள் பங்கு தவிர்ந்த மற்றைய நிறுவனங்களில் பணிகளை மேற்கொண்டாலும், அவர்கள் ஆன்மீக கடமையை செய்கிறார்கள்.

உங்கள் காவலனில் நம் குருக்களின் பெயர்கள் முன் அவர்கள் பட்டப்படிப்புகளைக் குறிப்பிடுவது சாதாரணமாகி வருவதைக் கவனிக்கக் கூடியதாயுள்ளது. 'அருள்தந்தை" என்று குறிப்பிடுவது, எந்தக் 'கலை, கலாநிதிப்பட்டங்களிலும் மேலானதாகத் தென்படுகின்றது.

மேலும், இப்படியான சிறப்புப் பெயர்கள், விசுவாசிகள் மத்தியில் குருக்களைப் பற்றி "ஏற்றத் தாழ்வான" சிந்தனைகளைப் பிறப்பிக்கலாம். 'எங்கள் பங்குச்சுவாமி படித்தவர் உங்கள் பங்குச்சுவாமி படியாதவர்" என்ற வீண் பேதங்களை உருவாக்கலாம்.

இப்படியான வீண் பேதம் வசதிகள் குறைந்த இடங்களில் முயற்சியோடு பணிபுரியும் குருக்களுக்கு இடையூறாக அமையலாம்.

யாழ்பாணத் திருச்சபையில் குருக்களின் மேற்படிப்பைப் பொறுத்தமட்டில் ஓரே சீரான கொள்கை கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதும் மக்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. எனவே எல்லாக் குருக்களும் ஓரே விதமான சந்தர்ப்பங்களைப் பெறுவதில்லை. தங்கள் தனிப்பட்ட செல்வாக்குகளைப் பயன்படுத்தியும், அரசியல் நிலைமையை சாதகமாக்கியும் படிப்புகளை சிலர் மேற்கொள்கிறார்கள். இந்நிலைமையும குருக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வான மனநிலையையும், அதிருப்தியையும் ஏற்படுத்தலாம்.

மேற்படிப்பு திருச்சபையின் தேவையைப் பொறுத்தே நிர்ணயிக்கப்பட வேண்டிய ஒன்று. எனவே எமது எல்லாக் குருக்களும் மேற்படிப்பை மேற்கொண்டவர்களாயிருக்க வேண்டிய தேவையில்லை. தேவையில்லாமல் அணிவிக்கப்படும் "புனைபெயர்கள்" மேற்படிப்பிற்குப் போகத் தேவையில்லாதவருக்குத் ஒருவித தாழ்வு மனப்பான்மையை உருவாக்கலாம்.

மேற்சொல்லப்பட்டவைகளைக் கருத்தில் கொண்டு, தேவையில்லாதபோது, தேவையில்லாத கௌரவப் பட்டங்களை" எமது குருக்களுக்கு அணிவிப்பதில் காவலன் கருத்தாயிருப்பது நலமாகும்.

செல்வி எஸ்விட் ராஜன்.
சுவீற்சிலாந்து

# பாவி, நீ இனிமேல் செய்வதைப் பார்

கருணையுள்ள கடவுள் பிழை செய்யும் மனிதர் திருந்த யேசுவின் மூலம் வழிதந்தார். தனது வல்லமை, ஞானம், நேயம் எவ்வளவு என்பதைக் கிறிஸ்துவின் சீவியம், பாடுகள், சாவு, உயர்ப்பு மூலம் காட்டியுள்ளார்.

நான்—சொல்லு மனமே சொல்லு. நான் குற்றவாளியென்று நிரூபித்து விட்டாய். ஆனால் கிறிஸ்து என்னிடமாகப் பாடுபட்டுக் கொலையுண்டாரென்றும் சொன்னாயே, அப்படியானால் நான் தவறி விட்டேனில்லையா? ஒரு குற்றத்துக்கு ஒரு முறைதானே தண்டனை கொடுக்கலாம்.

குரல்—நீ சொல்வதிலே பொருளுண்டு, ஆயினும் சட்டத்தின் விளக்கத்தில் விதியாசமுண்டு. விபரீதமாக விளங்கினால் விலங்கும் வரும், யேசு உலகிலே வாழ்ந்தது மோட்சக் கதவை நமக்கு இலாதாவல திறந்து விடவல்ல. சிறு பிள்ளைகளுக்குப் பெற்றோர் செய்யுமாப் போலல்ல, புத்தி வளர்ந்தவர்களுக்குப்போல உதவி செய்ய, பாவ மனிதர் தங்களை மீட்க அவர் அறவும் ஆற்றலும் அளித்தார்; சொல்லியும் செய்தும் காட்டினார். "தன்னை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் கடவுளின் பிள்ளைகளாகும் வல்லமையைக் கொடுத்தார்." அதையே தம சீடர்ன் பாதங்களைக் கழுவிய பின்னர் "நானுங்களுக்கு மாதிரி காட்டினேன். நான் செய்தது போல நீங்களும் செய்யுங்கள்" எனக் கட்டளையிட்டார்.

கடவுள் மனிதரைத் தண்டிப்பதில்லை, பழிவாங்குவதுமில்லை, அவர் வைத்த இயற்கை நியதிப்படி பிழை செய்தவன் தன்னையே தண்டிக்கிறான். கண்ணை மூடிக்கொண்டு கல்லில் முட்டுகிறவன் அடிபட்டு வருந்து பல்லை உடைத்து இயல்பு. அது அவன் திருந்துவதற்கு ஒரு உபாயம், இயற்கையுன் எல்லா மனிதரும் ஒன்று. ஒருவரின் தின்மைக்கும், நன்மைக்கும் மற்றவரும் பங்காளிகள். பாவனையும் பெருமையும் ஒப்பப்படமாட்டா. எனவே திருட்டி எனற குறையினால் தவறு செய்தவன் அதை அறிந்து, ஏற்றுத் திருந்துவது கடவுளின் திட்டம். இல்லையேல் அவனுக்கே நட்டம், ஒளியைப் பாராது இருள் பக்கம் திரும்பினாய், மீண்டும் திரும்பு. சீவனான அப்பையப்பனை விட்டுப் பாழ்பட்டுப் பயம்பானாய், அந்த வழியால் நாடிவா. கடவுள் உன்னோடு. உன்னுள் உனக்காக இருக்கிறார். நீதான் அந்தகனாக அலைப்படுகிறாய், அறிவுக் கண்ணைத் திற, அவருடைய அன்புக் கரத்தைப்பிடி.

நான்—கடவுள் கோபிப்பதுமில்லை, தண்டிப்பதுமில்லையென்பது நல்ல செய்திதான். ஆயினும் துரோகம் செய்தவன் எப்படி அமைதி பெறமுடியும்.

குரல்—மன மாற்றத்தால் மாத்திரமே. தாவீதின் கதையை அறிவாயே, நாத்தான் இறைவாக்கினர் விருந்தினன் உவமையாலே தாவீதின் வாயாலே தண்டனைத் தீர்ப்பைப் பிறப்பித்தார். "ஆட்டுக்குட்டியைப் பிடித்துக் கொன்று தின்றவன் சாக வேண்டும். அதற்குப் பதிலாக நாலு மடங்கு கொடுக்க வேண்டும்", "நீரே அந்த மனிதன்" என்றதும் தாவீது திடுக்கிட்டான். மறுத்து நியாயம் பேச முடியவில்லை. அழிவான கொலையும், இழிவான விபசாரமும் உனது சந்ததியில் அகலாது என்பது இயற்கையின் தண்டனை, தாவீது அதை ஏற்றுக் கொண்டான். அதனாலே மன்னிப்படைந்தான். உயிர் தப்பினான், விபசாரத்தில் அகப்பட்ட பெண்ணை யேசுவின் முன் நிறுத்தினார்கள். அவளுடைய தீர்ப்புச்சட்டப்படி தெளிவு, ஆனால் அவள் மேலே கல் எறிய ஒருவரும் முன்வரவில்லை, அதற்குத் தகுதியுடையவர் பாவமில்லாத யேசு ஒருவர் தான். அவர் "நானும் தீர்ப்பிடேன். இனிமேல் பாவம் செய்யாதே, போ", என்று புத்தி சொன்னார், 38 வருடம் படுக்கையாயிருந்தவனைக் குணமாக்கிய யேசு அவனை எச்சரித்தார், "இதோ குணமடைந்துள்ளாய், இதிலும் கேடானதெதுவும் உனக்கு நேரிடாதபடி இனிப் பாவம் செய்யாதே", வியாதி வருத்தம் நோவும், சாவும் பாவத்தின் பயனே, மீட்பர் வந்து கடவுளின் இரக்கத்தைச் செயலிற் காட்டினார். நீதிக்குத் தவறும்படி எச்சரித்தார். எனவே, மனந்திரும்பிய பாவி ஆணவம், கன்மம், மாயை நீங்கிய பிள்ளையாக வாழ வேண்டும். அப்போதுதான் அமைதி, ஆனந்தம் அடையலாம்.

நான்—மன்னன் தாவீதுபோல நாமும் அகப்பட்டுக் கொண்டோம். அந்தச் சிலையிலுள்ள சித்திரம் நமது கைவலையாயிற்றே. அதற்கு நாமே பொறுப்பு. அந்தப் பழியினின்று மீள ஏதாவது வழியுண்டா?

குரல்—ஆம், உண்டு. மனமுவந்து உனக்காய் உத்தரித்த யேசு உன்னைத் தள்ளி விடமாட்டார். ஆனால் நீ அவர் பிடித்த உன் (பாவியின்) இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அவரைப் போல உனக்காகவும், பிறருக்காகவும் உத்தரிக்கத் துணிய வேண்டும். மனந்திரும்பு, உன்னைத் திருத்து, அப்போது உயிர்த்த யேசு உன்னை ஏற்றுக் கொள்வார். என் மகனைக் கொன்ற சத்துராதி என்று கடவுள் உன்னைக் கோபிப்பாரே என்று பயப்படுகிறாயா? சிலுவையிலே யேசு உனக்காகவும் மன்றாடினார். "தந்தையே, நாங்கள் செய்வது இன்னதென்று அறியார்கள், அவர்களை மன்னியும்," என்றதால் யேசுவின் உருவில் நீ நின்றால் பிதா உன்னைத் தள்ளிவிடமாட்டார், மாதா மரியாளுக்கு மறுமொழி சொல்வதெப்படி என்று நீ ஏங்கலாம் அதற்கும் மீட்பர் ஏற்பாடு செய்துவிட்டார். "மாதே, இதோ உன் மகன்" என்று உன்னையும் அவளிடம் ஒப்படைத்தார். இனி நீ அருளப்பரைப் போல மரியாளை உன் தாயாக உன் இல்லத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே, யேசுவின் இடமாய், யேசுவைப் போல நீ வாழ வேண்டும். இதையே சின்னப்பரும், 'கிறிஸ்து யேசுவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருப்பதாக'' என்று போதித்தார்.

நான்—யேசுவின் மனநிலையை நாமெப்படி அடையமுடியும், இதற்கு ஏதாவது மருந்தோ மாயமோ உண்டா?

குரல்—உலக்கெதிராகத் தனது பாடுகளின் சித்திரத்தை மட்டும் யேசு விட்டுப் போகவில்லை, அதற்கு முன் உனக்குச் சார்பாகத் தனது சீவியத்தின், மரணத்தின் ஞாபகத்தைச் சீடருடன் விட்டுச் சென்றார். அவர்களுடன் அருந்திய கடைசி இராப்போசனத்தின்பின் தன்னையே தின்னச் சொல்லி அவர்களுக்கு

அளித்தவர்: அம்பி.

அளித்து அதைத் தனது ஞாபகமாகச் செய்யும்படி கட்டளையிட்டார். இதுவே அன்பின் அனுமானம், பாவி மனிதரைத் தியாக புனிதராக்கும் மருந்து. அது ஒரு மாயமுந்தான், மாய்+ஆம், மாயும்+ஆகும், மாய்தல்+ஆகுதல், இறப்பும் பிறப்பும், பாவிசாகப் புனிதர் பிறப்பது, இந்த அதிசயம் மீட்பரின் மரணசாதனம். இது பேதை மனிதான் அகந்தைக்கும் மிருக இச்சைக்கும், உலக ஆசைக்கும் உரிய அவுடதமாகும்.

கொலை செய்யாதே என்பது, கடவுளின் கட்டளை உயிர் அவனுக்கு மட்டுமே சொந்தம். அதைப் பறிக்க வேறெவருக்கும் உரிமையில்லை. தன் உயிரைக் காக்கும் கடமைக்காக மட்டுமே வேறு உயிரை அழிக்க உத்தரவுண்டு. எனவே, ஒரு உயிரைக் கொன்றால் அது நஞ்சில்லையானால் உண்டு முடிக்க வேணும், இல்லையேல் அதின் பழி தீராது. தாது, தாவரம் மிருகம் (மீன், பட்சி) எல்லாம் மனித உயிரிலே சங்கமிக்க வேண்டியவை. அதனால் அவை அழியாது நிறைவு பெறுகின்றன. பிழை செய்து தன்னுயிரையே கொன்ற மனிதன், மாதிரி மனிதனையும் அவனுள்ளே கடவுளையும் கொன்று போட்டான். அந்தப் பழியினின்று தவறும் வழி அந்த உடலை விழுங்கி மறைத்து விடுவதுதான். இல்லையேல் அது ஆபேலின் இரத்தம்போல அபயமிடும். யேசு தந்த தந்திரம் பயங்கரமான மருந்து. ஆனால் மனிதரின் வருத்தத்துக்குப் பொருத்தமான பரிகாரம், குண்டுச் சவுக்காலும் முள்ளுத் தொப்பியாலும் அடித்துக் கிழித்த தசையையும் வடிந்த இரத்தத்தையும் உண்டு குடி, உனது பேயாவேசம் தணியும். அவருடன் ஒன்றாவாய். பாவியாயிராது தியாகியாய் மாறுவாய்.

நான்—இது காட்டுமிராண்டித் தனமில்லையா? எதிரிகளின் இறைச்சியை உண்டு இரத்தத்தைக் குடிப்பது மிலேச்சர் மட்டுமே பண்புள்ள மனிதருக்கு ஆகுமா?

குரல்—மனித பண்புள்ள மனிதர் எங்கே என்று காட்டு, அதை இழந்த படியாலல்லோ உலகில நிர்ப்பக்கியம். பேய் மனிதர் மற்றவர்களை அடக்கி அழிக்க இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் இரத்தமோ தன்னை இழக்க, மற்றவர்களை வளர்க்க, பாவஞ்செய்யும் மனிதன் மிருகத்திலும் கேடு, மிருக சக்தியை மனிதன் போலப் பாவித்தால் அவன் தேவனாவான். மனித சக்தியை மிருகம் போலப் பாவித்தால் பேயனாகின்றான். பேய், பொய், பொள் என்பன வெறுமையைக் குறிக்கும் பதங்கள். போர்க்களத்திலே பேய்கள் கூடிப் பிணம் தின்னும் என்று இலக்கியம் கூறும். பேய்கள் போலல்லவா பாவிகள் அந்த மனிதனை இயன்ற மட்டும் வதைத்தார்கள். "அந்தப் பழி எங்கள் மேலும் எங்கள் சந்தானத்தின் மேலும் வரட்டும்" என்று ஓலமிட்டார்கள். நீயுந்தானே அந்தக் கும்பலோடு கூடிக் கூவினாய். அதின் பயனாகவே எங்கும் அநீதியும், உத்தரிப்பும் அகல முடியாது. ஆயினும் தின்மையையும் நன்மை வழியிலே திருப்பக் கடவுளுக்கு வல்லமையுண்டு. பகையின் பேதைமையையே அவர் இங்கு அன்பின் மருந்தாக மாற்றுகிறார்.

நான்—உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை இனி எப்படிப் புசிக்க முடியும்?

குரல்—இது விசுவாச போசனம். ஆசி கூறிய அப்ப இரசத்திலே மகிமையில் வாழும், கிறிஸ்து வந்திருந்து செயலாற்றுகிறார். விசுவாசமில்லாதவனுக்கு இது நஞ்சாகும். தன்னை ஏற்ற சீடரை, இயேசு தன்னுடன் இணைக்கிறார். சகோதர ஒற்றுமை, மன்னிப்பு மனப்பான்மை வளர்கிறது. பிறர்குறைகளை நிறைக்கும் ஆவலால் அன்பு அதிகரிக்கிறது. இதனால் உலக வாழ்வு நரக ஆரவாரமாயிராமல் மோட்ச வாசலாகவே மிளிரும். பாவியின் குற்றமும், தீர்ப்பும் என்றும் அழியாதிருக்கும், ஆனால் மூடப்பட்டிருக்கும். நீயே அதைத் திரும்பவும், உனக்கெதிராகத் திறக்க முடியும். எனக்கும் நீ வாய்ப்பூட்டுப் போடலாம். நீ பகுத்தறிவைப் பாவித்து அந்த இளைய ஊதாரி மகன்போல மனம் மாறினால் இயேசுவோடு பிதா வீட்டில் உனக்கு இடம் கிடைக்கும். தாழ்மை, நன்றியுடன் சீடன் பேதுரு போல நீயும் வாழமுயன்றால் கிறிஸ்துவுடன் மகிமையில் உயிர்க்கலாம், கடவுளின் காட்சியிலே களி கூரலாம்.

நான்—ஆண்டவனே என் பக்கமானால் பாவி எனக்குப் பயமேது? கடவுள் பெரியவர். அவருடைய ஆற்றல் அறிவு அன்புக்கு அளவே இல்லை. என்னே மனிதரின் மதி கேடு?

எங்கள் மடமையை விட மறுக்கிறோம். கடவுள் தந்த கொடைகளை எடுத்துப் பாவிக்க மறக்கிறோம். நியாய புத்தியைப் பாவித்தால் மனிதர் இத்தனை பாடுபட்டு உத்தரிக்க அவசியமிராதே. கடவுள் கிறிஸ்துவில் நமக்குப் படிப்பித்த இரக்கத்தின் பாடம் நமது நம்பிக்கை, நமது மகிழ்ச்சி. எனவே உண்மையை அறிவோம், நன்மையை விரும்புவோம், உலகுக்கு மரிப்போம், இலகுக்கு உயிர்ப்போம்.

## உண்மை உறங்கவில்லை ......

பதவியில் நிலைநிற்க பாதகரின் கையிலே
பரமன் யேசுவை கையளித்தான் அன்றொரு பிலாத்து
பாரினிலே எத்தனை பிலாத்துக்கள்
பதவிக்காய் பதறுகின்றார்கள்?......

ஆண்டவன் யேசுவின் ஆடையை உரிந்தெடுத்தார்
அங்கலாய்த்தார்கள் ஆடைக்கு
ஆசையின் விளைவால் சீட்டுப்போட்டார்கள் - இன்று
அயலவனின் சொத்தில் ஆசை கொண்டு
அவனியில் வாழும் பரிசேயர் எத்தனைபேர்?......

வழிநடத்திச் சென்ற கால்கள்
அரவணைத்த கைகள் - இவற்றை
ஆணிகள் பதம் பார்க்கின்றன
கொலை செய்யப்படும் அளவிற்கு
அவர் செய்த குற்றமென்ன?......
நியாயங்கள் தண்டிக்கப்படலாம்
உரிமைகள் பறிக்கப்படலாம் - ஆனால்
எமக்கு உரிமை வாழ்வு கிடைத்துவிட்டது
உண்மை உறங்கவில்லை......

அருளப்பு ரஞ்சிதமலர்
கரும்பிராய்

# ஏன் பிறந்தோம்?

வாழ்வில் எல்லா நலன்களையும் பெற்று நாம் வாழப் போகின்றோம் என்பதில் நமக்கு நம்பிக்கைவேண்டும். தன்னம்பிக்கையே மனிதனை இவ்வுலகில் வாழவைக்கிறது.

## கிறிஸ்தவ வாழ்க்கையில் துன்பம் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றது




கிறிஸ்தவ வாழ்க்கையில் துன்பம் ஒரு பெரும் பாகத்தை வகிக்கின்றது பொறுமையுடன் ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு துன்பமும் கிறிஸ்தவ வாழ்வு என்னும கட்டிடத்தை எழுப்ப செங்கற்களாக அமைகின்றது எந்த மனிதனுக்குமே துன்பம் விதிவிலக்கல்ல. ஆனால் கிறிஸ்தவனுக்குத் துன்பத்தை இன்பமாக்கத் தெரியும். அதனால் பயனடையத் தெரியும். பொறுமையுடன் சகித்து, படிப்படியாக அமைத்து ஞான வாழ்வில் முன்னேறி மோட்சம் அடையத் தெரியும். ஆனால் கிறிஸ்தவர்களிலும் எத்தனை பேர் துன்பத்தைக் கண்டு கலங்குகின்றனர்? மனம் தளர்ந்து விடுகின்றனர்? துன்பத்தை விட்டு விலகி, இன்பமாய் வாழ அந்த தீய தகாத வழிவகைகளையும் நாடுகின்றனர். துன்பம் வந்ததும் கோழைகளாய் மாறி, கடவுளையே பழித்துத் தூற்ற ஆரம்பித்து விடுகின்றனர். ஆனால் அனைத்தையும் அறியும் அன்புத் தந்தை அனுமதிக்கும் அத்துன்பமெல்லாம் நமது நன்மைக்கே என்று ஏற்கும் வீர உள்ளம் பெற்றவர்கள் ஒரு சிலரே. இறைவன் ஒரு துன்பத்தை அனுமதிக்கின்றார் என்றால் அதிலே நாம் மூழ்கி மடிய அல்ல, ஆனால் அதைவிட ஒரு பெரிய துன்பத்திலிருந்து நம்மைக் காப்பாற்றத்தான், அந்த துன்பத்திலே நம்மை நீராட்டி தூய்மைப்படுத்தித் தம்முடன் இணைத்துக்கொள்ளத்தான்.

அருட்சகோ. ம. இரேசன்,
C. M. S. F.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு — 62

குருசுமுத்தண்ணை:- பெரிய பள்ளியில சேர்க்கத் திரிஞ்சாய். சோதினை முடிவு எப்படித்தம்பி?

அடைக்கலம்:- பணத்தைக் கொட்டியும் படிப்புகள் கூட டைதானேண்ணே. சமயப் படிப்புக் கூட சரியா யில்லையே.

குருசுமுத்தண்ணை:- படிக்கிறதை விட பிறந்தநாள், யூபிலி நடாத்த எல்லோ நீ கொடுக்கிற பணம் செலவாகுது. அட... சமயப் படிப்பில கூட சாதிக்கேல்லப் பாரு.

அடைக்கலம்:- உதுக்கு என்னண்ணே செய்யலாம்?

குருசுமுத்தண்ணை:- இதுக்கு பள்ளியை மட்டும் காரணம் சொல்லாத. ஒவ்வொருதர் பங்கும் கவனமாயிருந்தா சமயமாவது பாஸ்பண்ணி இருக்கலாம் எல்லோ. இதுக்காவது முன்னுரிமை கொடுக்காட்டி எதை விளைச்சியளோ அதைத்தானே அறுவடை செய்யலாம் சொல்லு.

## வானகமே! வையகமே!

வானகமே! வையகமே!
வானில் மிளிர் தாரகையே!
பாரின்புகழ் சாற்றிடத்தான்
கடவுள் உனைப் படைத்தாரோ!

கானகமே! கடல்திரையே!
காட்டில் வாழ் விலங்கினமே!
பாடியெழும் பசுந்தரையே!
பரமன் உனைப் படைத்ததேனோ

பார்படைத்த பாவலனை
பாடித்தொழ உமைப்படைத்தார்.
மாண்புமிக்க மனிதஇனம்
அவை மறந்து போயினரோ!

எஸ். ஏ. குமார், கரம்பொன்.

என்ற அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். அதை அடைய நமக்கு தைரியம், நேர்மை, சத்தியம் என்ற நன்நெறிகள் வேண்டும். இதையும் தாண்டி நாம் நமக்காக வாழாமல் சமுதாயத்திற்காக நாட்டிற்காக, வாழத்துவங்கும் போதுதான் நமது ஆதி மனித பண்புகளான கருணை, தியாகம், லட்சிய ஈடுபாடு பகைவனை மன்னிக்கும் மனோபாவம், போன்ற உயர்ந்த பண்புகள் நம்மிடமிருந்து வெளிப்படுகின்றன.

அப்படி ஒரு வாழ்க்கை வாழாமல் நம்மை நாமே மறைத்துக் கொண்டு, நமக்காகவே வாழ்ந்து முடிவோமானால் அர்த்தமே இல்லாத வாழ்க்கை வாழ்ந்தவர்களாவோம். உலக நியதிக்கு அப்பாற்பட்ட காரியத்தை செய்தவர்களாவோம். இந்த உலகமும் அதில் வாழும் எல்லா உயிர்களும் ஒன்றை ஒன்று நாடி உதவி புரிந்தே செயற்படுகின்றன.

இப்படி மக்களும் பொருட்களை கொடுத்து உதவுததால் தான் மனித வாழ்க்கை சாத்தியமாகின்றது. இப்படி பெறும் நாம் கொடுக்கவேண்டாமா? கொடுப்பதின் மூலம் தான் பெற்றுக்கொள்ள முடியும் என்ற புனித அசிசியாரின் தத்துவத்திற்கொப்ப கொடுங்கள் மனமுவந்து அள்ளிக் கொடுங்கள்.

காந்தி தன்னலம் கருதாது நாட்டின் நலன்கருதி வாழ்ந்தார். அதனால் இன்று உலகம் அவரை மகாத்மா என்று போற்றுகின்றது. அதேபோல் நீயும் அஞ்சா நெஞ்சமும் கஷ்டங்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும், எதையும் லட்சியத்திற்காக தியாகம் செய்யும் உள்ளமும் கொண்டு பிறருக்காக வாழ்வதன் மூலம் தியாகியாகிறாய். மதொண்டனாகிறாய்.

எவ்வித நலனையும், நன்றியையும் எதிர்பாராமல் அன்னை திரேசாபோல் உள மகிழ்ச்சியோடு சேவை செய்ய என்று முன்வருகிறாயோ அன்று கிறிஸ்துவின் தியாக அன்பில் வேரூன்ற ஆரம்பித்து விட்டாய் என்று பொருள். மகிழ்ச்சியின் ஆதவன் உன் வாழ்வில் உதித்து ஒளிவீச ஆரம்பித்து விட்டான் இது தான் தியாகமும், இதுதான் உண்மையான கிறிஸ்தவ வாழ்வும்.

ஆகவே தியாக நோக்குள்ள இளைஞர்களும், யுவதிகளும் சமுதாயத்தின் பொது நீரோட்டத்தில் பங்குபற்றி சமுதாயத்தை வளம்படுத்தி வலுப்படுத்த தம்மாலான சேவையைச்செய்யமுன்வரவேண்டும். அங்கேதான் நீ பிறந்ததின் நோக்கமும் நிறைவேறுகின்றது.

பி. பி. பிறின்ஸ்
பாஷையூர்

கிறீஸ்துவத்தின் அடிநாதம் விசுவாசம், அந்த விசுவாசத்திற்கு அத்திபாரம் கிறீஸ்துவின் உயிர்ப்பு.




## கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் திருமணம்

கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் திருமணத்தின் பொருளை விளங்கிக்கொள்ள முதலில் கிறிஸ்தவன் யார்? என்ற மையப் பொருளை நன்கு விளங்கிக் கொள்வது அவசியமாகும். 'மையம்' என்ற சொல் நன்கு அழுத்தப்படுவது ஏனெனில் துர் அதிஷ்டவசமாக கிறிஸ்தவர்களில் பலர் தாம்யார்? தாம் எவ்வாறு இருக்கவேண்டும்? என்று மேலெழுந்தவாரியாகவே அறிந்திருக்கிறார்களே தவிர ஆழமாக அறிந்திருக்கவில்லை - நன்கு புரிந்துகொண்டிருக்கவில்லை என்பது தெரிகின்றது.

கிறிஸ்தவன் என்பதன் நேரான கருத்து ''கிறிஸ்துவைப் பின்பற்றுபவன்'' என்பதாகும். அதாவது கிறிஸ்துவை விசுவசித்து அவரை மாதிரியாகக் கொண்டு வாழ்பவன் ஆகும். திருமுழுக்கின் மூலம் நாம் கிறிஸ்தவர்களானோம். புனித அருளப்பர் கூறுவது போல் திருமுழுக்கிலே நாம் கிறிஸ்துவைத்தரித்துக் கொண்டோம். அதாவது எமது உள்ளரங்கத்தில் ஏற்படும் மாற்றம் காரணமாக நாம் ''மறு கிறிஸ்து''வாக ஆகிறோம். கிறிஸ்தவன் ஒவ்வொருவனிலும் மக்கள் கிறிஸ்துவைக் காணவேண்டும், இதுவே கிறிஸ்துவின் சாட்சிகள் என்பதன் உட்பொருளாகும். உண்மையான கிறிஸ்தவனாய் வாழ்வதற்கு கிறிஸ்தவ ஒழுக்கமுறைகள் சாதனங்களாக அமைகின்றன.

### கிறிஸ்தவ அன்பு

நடைமுறையில் கிறிஸ்தவ அன்பு என்றால் என்ன? இதற்கு விடை அறிய இயேசு எப்படி வாழ்ந்தார் என்பதை நாம் நோக்கவேண்டும். நற்செய்தி ஏடுகள் கிறிஸ்துவை நமக்குத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. சமகால எழுத்தாளர் ஒருவர் ''மற்றவர்களுக்காக வாழ்ந்த ஒரு மனிதன்'' என்று கிறிஸ்துவை வர்ணித்துள்ளார். இயேசு இவ்வுலகுக்கு வந்து வாழ்ந்து மக்களுக்காகவே மடிந்து உயிர்த்தெழுந்தார். அதாவது எமக்காக வாழ்ந்து மடிந்தார்; தனக்காக வல்ல. இதுவே பிறருக்காக வாழும் அன்புக்கு இலக்கணமாகும். இவ்வாறு கடவுளின் அன்பைக் கிறிஸ்து எமக்கு வெளிப்படுத்தினார். கடவுள் என்றால் அன்பு என்பதை வாழ்ந்து காட்டினார், கிறிஸ்து உலகுக்கு வந்தது இறைவனின் அன்பை நமக்கு வெளிப்படுத்தவே. இப்பொழுது அவருடைய பணி எம்முடையதாகும். ஏனெனில் நாம் கிறிஸ்தவர்கள் - மறு கிறிஸ்துக்கள். நாம் நமக்காக வாழாமல் பிறருக்காகவே வாழவேண்டும். இயேசுவைக் கொண்டிருக்கும் நாம் அவரை மற்றவர்களுக்குக் காண்பிக்கும் பொருட்டு எமது வாழ்க்கையும் அன்புவாழ்க்கையாக அமையவேண்டும்.

திருமணம் என்பது இருவர் இணைந்து ஒருவர் ஒருவருக்காக வாழும் வாழ்க்கையல்லவா? அடிப்படையில் மண ஒப்பந்தமானது சட்டத்தினால் ஏற்படும் ஒப்பந்தமோ சமூகத்தினால் உருவாக்கப்படும் ஒப்பந்தமோ அல்ல. ஆனால் அது ஒரு அன்பின் ஒப்பந்தமாகும். திருமணத்தில் இணைக்கப்படுபவர்கள் ஒவ்வொருவரும் ஒருவர் ஒருவருக்காக முழுமையாகவாழத் தம்மை அர்ப்பணித்துக்கொள்ளும் வாழ்க்கை ஒப்பந்தமாகும். கிறிஸ்தவர்கள் இருவர் - (ஒரு ஆணும் ஒரு பெண்ணும்) ஒருவரோடொருவர் கிறிஸ்தவ தன்மையில் மிக ஆழமாக இணைந்து வாழ்வதே கிறிஸ்தவ திருமணமாகும். கிறிஸ்தவ தன்மைகளை எவ்வளவுக்கு கொண்டிருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்களது மணவாழ்க்கையும் உண்மையானதாயிருக்கும். அதாவது ஒருவர் ஒருவருக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துவிடுகிறார்கள்.

### அடையாளம்

கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் இடையிலுள்ள பிணைப்புக்கு -உறவுமுறைக்கு அடையாளமாய் அமைவது திருமணம் என்று புனிதசின்னப்பர் அழகாகக் கூறுகின்றார். இயேசு திருச்சபைக்காக வாழுகின்றார் திருச்சபையும் அவருக்காகவே உழைக்கின்றது - வாழுகின்றது. திருச்சபையும், இயேசுவும் பிரிக்கமுடியாதவாறு ஒருவரோடொருவர் முழுமையாகப் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் இடையிலுள்ள புலன்களுக்கெட்டாத ஞான உறவைத் தம்பதிகள் கண்டுபாவித்து அந்நியோன்னியமாக ஒருவரை ஒருவர் அன்புசெய்து வாழமுடியும். பழைய ஏற்பாட்டிலே இறைவனுக்கும் அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ராயேல் மக்களுக்குமிடையில் காணப்பட்ட உறவையும் திருமண உறவுக்கு உதாரணமாகக் கூறுவதுண்டு.

# அருள் வாக்கு அறிவோம்

## நற்செய்திக்கோர் பின்னணி — (9)

### மாற்கு நற்செய்தி நூலின் பிரிவுகள் — (அ)

வாசகர்களே! தான் நற்செய்தி எழுதப் புகுந்ததின் நோக்கத்தை விளக்கும் வண்ணம், தனது எழுத்தோவி யத்தை அமைக்கின்றார் நற்செய்தியாளர் மாற்கு. மாற்கு நற்செய்தி நூலை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதல் பாகம் - கிறீஸ்து கடவுளின் மகன் (1:14 – 8:30) வரை. இரண்டாம் பாகம் – கிறிஸ்து மனுமகன் (8:31 – 16:8) வரை. கிறிஸ்து கடவுளின் மகன் எனவும் அதேநேரத்தில் கிறிஸ்து மனுமகன் எனவும் நற்செய்தியாளர் மாற்கு தனது நூலில் விரிவாக எடுத்தியப்ப முயன்றாலும் யேசுவை துன்புறும் கிறிஸ்துவாக பாடுகளை அனுபவிக்கும் தான் தனது நூலில் முழுவதும் விரிவுபடுத்துகின்றார்.

(அ) யேசு கடவுளின் மகன் :– யேசுக்கிறிஸ்து கடவுளின் மகன் என்று தனது நற்செய்தி நூலை எழுத ஆரம்பித்தார் தான் (1:1) கிறிஸ்துவின் போதனைகளிலிருந்தும் சிறப்பாக அவருடைய புதுமைகளிலிருந்தும் (2:1-2,1:40:45.) யேசு திரு நீராட்டல் பெறும் போதும் (1:11) உருமாறிய போதும் (9:2-8) ஒலிக்கும் விண்ணகத்தந்தையின் குரலினைப்பற்றிக் குறிப்பிடுவதாலும் அவர் கடவுளின் மகனென மாற்கு போதிப் பதற்காக நாம் உணரலாம். இன்னும் கிறிஸ்துவைக் கண்டு "நீர் கடவுளின் மகன்" "நீர் கடவுளின் பரிசுத்தர்" என்றெல் லாம் கூறி அலகை அலறியடித்துக்கொண்டு ஓடுகின்றது. (3:11,1:25) இயற்கை சக்திகளை அடக்கியாளுகின்றார். (4:35-39; 6:45:51) இதனால் யேசு கடவுளின் மகனென் பதை மாற்கு மறுக்கவில்லை ஏற்றுக்கொள்கின்றார். ஆனால் இதைத்தான் மாற்கு சுட்டிக்காட்டி இதனுடன் நிற்கவில்லை.

ஆனால் நீங்கள் நற்செய்தி நூலைத் தொடர்ந்து படிக்கும் போது இயேசுவின் வேறு சில முக்கியமான செயல்களையும் பற்றி மாற்கு எடுத்துரைப்பதையும் காணலாம். அதன் மூலம் இயேசு மனுமகன் என்பதையே தனது பிரதான நோக்கம் என்று தெளிவாக தனது நூலில் சுட்டிக்காட்ட விரும்புகின் றார் என்பது தெளிவாக விளங்கும் அடக்கு முறைகளாலும் அடிமைத்தனத்தினாலும் துன்புற்ற யூதரல்லாத கிறிஸ்தவர் களைத் தேற்றவே மாற்கு தனது நற்செய்தி நூலை எழுதி னார் என்பதை நாம் மறந்து விடலாகாது தொடர்ந்து பார்ப்போம்.

## யாழ்-குருத்துவக் கல்லூரியில் திருத்தந்தையின் தூதுவர்

திருத்தந்தையின் தூதுவருடைய யாழ். சுற்றுப்பயணத்தின் இரண்டாம் நாளாகிய 25-3-90 ஞாயிற்றுக்கிழமை தூதுவரும், அவருடைய செயலாளரும் யாழ் ஆயர் அவர்கள் சகிதம் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக்கல்லூரிக்கு வருகை தந்திருந்தார்கள்

அன்றைய தினம் காலை 9-30 மணியளவில் குருத்துவக் கல்லூரியை அடைந்த மூவரையும் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்திரு எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் சக குருக்கள், விரிவுரையாளர்கள் அருட்சகோதரர்கள் புடைசூழ கைலாகு கொடுத்து வரவேற்றார். மூன்று தமிழ் மறை மாவட்டங்களை பிரதிநிதித்துவப் படுத்திப் புதுமுக மெய்யியல் மாணவர்கள் மூவர் விருந்தினருக்கு மலர்மாலை அணிவித்தனர். மாணவ முதல்வர் அருட்சகோதரன் அருள் யாலிஸ் அவர்கள் விருந்தினரை வரவேற்பு உரையாற்றியதைத் தொடர்ந்து தூதுவரும் யாழ் ஆயர் அவர்களும் முறையே திருத்தந்தையின் வெண்பொன் நிறக் கொடியையும் குருத்துவக் கல்லூரிக் கொடியையும் ஏற்றி வைத்தனர்.

தூதுவரின் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியில் சுமார் 15 குருக்கள் பங்குபற்றினர். திருப்பலி தமிழ் பண்பாட்டிற்கு இணங்கவும் திருச்சபையின் அகிலத்தன்மையை உணர்த்தவும் கிரேக்க, லத்தீன், ஆங்கிலம், தமிழ்-இவைகளின் இசையில் நடந்து தூதுவர் அவர்கள் தமது மறையுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். "கிறிஸ்துவைப் போல் துன்பப்பட்ட இம்மண்ணின் மைந்தர்களுடன் இணைந்து இங்கிருப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இறைமகன்– இயேசுவின் பாடுகள், மரணம், என்பவற்றை நினைவு கூரும் இந்தக்காலத்தில் நீங்கள் அனுபவித்த துன்புறுத்தல்களை இறைவனோடு இணைந்து வாழுங்கள்"

திருப்பலியின் பின்னர், தூதுவரின் வருகையை கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் அருட்சகோதரர்களின் கலை நிகழ்ச்சிகளும் கல்லூரி அதிபர் அவர்களின் உரையும் திருத்தந்தையின் தூதுவரின் ஆசியுரையும் இடம்பெற்றன, அதிபர் அவர்கள் தமது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார் "நீண்ட

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்

வாசக நேயர்களே!

இன்று எமது மக்கள் மத்தியிலே ஏமாற்றுபவர்கள் பலர் உண்டு. தங்கள் வாய்ச் சாதுரியத்தினால் உதவாத பண்டங்களையெல்லாம் உயரத் தூக்கி வைத்து கொள்ளையடித்து தங்கள் காரியத்தை சாதுரியமாக முடித்துக் கொள்கிறார்கள். ஏமாறுகின்றவர்கள் இருக்கும் மட்டும் - ஏமாற்றுகின்றவர்கள் இருந்து கொண்டுதான் இருப்பார்கள். தாங்கள் வாங்கிய பொருட்களை வீட்டில் போய் கணக்குப் பார்க்கும் போதுதான் தாங்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டோம் என்பதை எண்ணி மனம் வெதும்பி - வெளியே சொல்லவும் முடியாமல், மனதில் தாங்கவும் முடியாமல் நொந்து நைந்த கதைகள் நம்மவரிலே பல உண்டு.

திருநூல் ஆசிரியர் 20/14ல் "கொள்வோன் எவனும் - உதவாதது என்கிறான். ஆனால் அப்பால் அகன்றபின் அதைப் புகழ்ந்து கொள்கின்றான்." என்று பொழிப்பாக உரைக்கிறார். உண்மை தானே. இது வியாபாரிகளுக்குள்ள தந்திரமுளை. அப்பாவிகள் தங்கள் பொருட்களை விற்கச் சென்றால் - அவர்களையும் ஏமாற்றி, கொள்வோர்களையும் "பேய்க் காட்டி" விட்டுச்செல்வது எமது சமூகத்தில் அன்றாடம் காணுகின்ற காட்சிகள். அண்மைக்காலக் கணக்கெடுப்பு ஒன்றின்படி நமது வடக்கு-கிழக்கு மாகாணத்திலே ஆறு பெண்களுக்கு ஒரு ஆண் தான் உண்டு என்று கணித்திருக்கிறார்கள் அப்படியானால் நமது பெண்களை வாழவைக்க நமது பெற்றோர் படும் பாடு பெரும்பாடு! பணவசதியற்ற பெண்களின் நிலை என்னவென்று சற்று யோசித்துப் பாருங்களேன்!

இதையே நம் முன்னோர் "பணம் இல்லாதவன் பிணம்" என்றும், "பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை" என்றும் இரு பழமொழிகளில் பெரும் பொருள் சொன்னார்கள்.

ஆனால் நம் "திருநூல்" இதற்கு எதிரிடையாகத் தரும் முக்கிய செய்தி...

" பொன்னும்- பல முத்துக்களும் இருப்பினும் ஞானியின் உதடுகளே விலை பெற்ற அணியாம்" என 20/15-ல் இடித்துரைக்கின்றார். பார்த்தீர்களா?

"ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கல்யாணத்தைச் செய்" என்று கூறும் ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு.

"உண்மை சொல்லி உத்தமனாய் வாழ்" என்று கூறி வைப்பது எவ்வளவு பொருத்தமாகும்!

### வாரம் ஒரு சிந்தனை:

"LIFE IS THE BEST TEACHER"

அன்புடன்
எஸ். ஏ. நாதர்

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 4<br>சுடர்: 12 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

## விழி வழி:

### களவு:

நம்மிடையே களவுகள் மலிந்துவிட்டன. களவெடுத்தலைக் கலையாகக் கற்று, அதன் மூலம் பொருளீட்டும் பெரும் மனிதர்களைக் கண்டு, சிறுசுகளும் அதன் வழி நடக்க முற்படுவது வேதனைக்குரியது.

வகுப்பறைகளில் நடைபெறும் திருட்டுக்களைக் கண்டு பிடிப்பதே பெரும் கஷ்டமான காரியம். இதற்கு திட்டமிட்டுச் செயற்படும் குழுக்கள், உண்மைகூற அஞ்சும் மாணவர், கடமையுணர்வு மிக்க ஆசிரியருக்குப் பாதுகாப்பின்மை, பணத்தை விரயமாக்கும் மாணவர் இன்னும் பல காரணங்களைக் கூறலாம். இறையுணர்வு அருகிவரும் காரணம்தான் களவின் கருஎன்றால் மிகையாகாது. எங்கும் நிறைந்தவர், எல்லாம் தெரிந்தவர், வல்லமை மிக்கவர் இறைவன் என்ற உணர்வு அருகிய காரணத்தால் நாம் பெற்ற அனுபவங்கள் எங்கள் அக இருளை அகற்றப் போதுமானவை. உன்னைப் போல் உன் அயலானை நேசி," என்ற அருள் மொழி அர்த்தம் மிக்கது அன்புச் சமுதாயம் அமைக்க அருள்நாதர் பட்ட வேதனைகளைத் தியானித்து, உருகிக் கண்ணீர்விடும் நாம் அயலவனின் பொருட்களைத் திருட முற்படுவது தவறு. வலது பக்கக் கள்வனுக்கு அவனின் மனஉருகலைக் கேட்டு வான் வீடு அளித்த எம் அன்பர், நிட்சயம் எங்கள் மன உருகலுக்கும் மன்னிப்புத் தருவார்.

அன்புச் சமுதாயத்தின் ஆணிவேர்
அடுத்தவர் பொருளை எடுப்பதல்ல
காப்பதேயாகும்.

அன்பின்
அன்பு விழி.

★ ★ ★

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.
(திருக்குறள் 281)

### சிந்தைக்குள் சிலுவை

நாளும் பொழுதும் நன்றாக
காலை மாலை என்றாக
போடுகிறாய் அடையாளம்
பொன்னான சிலுவைதான்.

வலது கைதான் நீ எடுத்து
வலிதற்ற மயிரகற்றி
பொலிவான நெற்றிதனில்
போடுகிறாய் சிலுவைதான்.

வேதக் கோயில் காணயிலே
வேலை செய்ய தொடங்கையிலே
மறக்காமல் போடுகிறாய்
மகத்தான அடையாளத்தை

சிலுவையின் அடையாளத்தை
சிந்தனைக்குள் சிறைப்படுத்தி
முதல்வர் சுதன் தூயாவி
இரட்சிக்கிறார்சிலுவையதால்.

D. E ரட்ணராஜ்
அ. எ. 65.

### நண்பரே!

அறிவைப் பெருக்கிடு.
அகந்தையை முறியடித்திடு.
ஆணவத்தை அழித்திடு.
ஆசையை அடக்கிடு.

ஆதவனாய் உதித்திடு-
ஆண்டவனைத் தொழுதிடு.
அறத்தைப் புரிந்திடு.
அண்டினோரை ஆதரித்திடு.

தட்டினால் திறந்துவிடு.
கேட்டால் கொடுத்துவிடு.
தேடினால் காட்டிவிடு.
மேற்கூறப்பட்டதைக் கடைப்பிடித்திடு.

அன்புக் குழந்தை
அங். என். 56.

ஓவியப் போட்டி 14 இல் பரிசு பெறும் ஓவியம்
உயிர்ப்பின் மகிமையில் யேசு



செல்வி. அருளானந்தம் றோசாஜினி

## சேவைக்காகத் துடிக்கும் இளைஞனே!

''உலகெங்கும் சென்று நற்செய்தியினை அறிவியுங்கள்'' என்ற இயேசுவின் அன்பு ஆணையின் விளைவே எம் பிரான்சிஸ்குவின் மறை பரப்பு சகோதர குடும்பம். இயேசுவின் நற்செய்தியை நம் ஈழமண்ணிலே வித்திட்ட புனித பிரான்சிஸ் அசீசியாரின் துறவிகளின் பணி இன்னும் உம்மால் தொடரப்பட இக்குடும்பம் ஒரு கருவியாக செயற்படுகிறது. யாம் பெற்ற இன்பம் இம் மண்ணகம் பெற்றிடத் துடிக்கும் தம்பியர்களே! இயேசுவின் நற்செய்தியினை அறிவிக்க உங்களையும் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| அசிசி இல்லம் | இயக்குநர் |
| குருக்கள் மடம், | 116, விகாரை வீதி, |
| மட்டக்களப்பு, | மாத்தளை. |

வட்டக்கச்சி

## புனித சூசையப்பர் ஆலய விழா

ஆராதனைகள் தினமும் மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும்.

மே 1ஆம் திகதி திருநாட் திருப்பலி—காலை 7-30 மணிக்கு.

அனைவரையும் ஆசீர் பெற அழைக்கிறோம்.

பங்குத் தந்தையும்,
பங்குமக்களும்.

## யாழ்-குருத்துவக்கல்லூரியில்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலமாக எதிர்பார்க்கப்பட்ட மகிழ்ச்சிநிறை இந்த வருகையானது தாய்த்திருச்சபையுடன் எமக்குள்ள உறவை பலப்படுத்தி வளர்ப்பதாக! பிரான்சு தேசத்தில் உங்களது சொந்த மறை மாவட்டத்திலிருந்து வருகைதந்த குருக்கள் கன்னியர்களின் அயராத உழைப்பினால்கட்டி வளர்க்கப்பட்டதே எமது யாழ். திருச்சபை. முழு இலங்கைத் திருச்சபைக்கு மட்டுமல்லாது, ஆசிய நாடுகள் பலவற்றுக்கும், ஏன் ஐரோப்பிய நாடுகளுக்குமே பணிக்கென குருக்கள் கன்னியரைத் தருவதில் பெருமிதமடையும் ஒரு தலத்திருச்சபைக்கு நீங்கள் வருகை தந்துள்ளீர்கள். இத்திருச்சபையின் நீண்டநாள் பேரவா எமது குருக்கள் எமது மண்ணில் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்பதே. இக்கனவின் நிறைவான வெளிப்பாடே இக்குருத்துவக் கல்லூரியாகும். ஆசியாவிலுள்ள வேறு எந்த குருத்துவக் கல்லூரியையும் போல தாமும் கல்வித்தரத்தில் உயர்ந்து விளங்க உரோமை நகரின் ஊர்பான் பல்கலைக் கழகத்தின் ''இணைவு- நிறுவன நிலை'' அங்கீகாரத்தை விரைவில் எதிர்பார்த்து நிற்கின்றோம். இவ்விடயத்தில் தங்களின் மேலான ஒத்துழைப்பையும் நாடுகின்றோம்''

தொடர்ந்து தூதுவர் தமது உரையில் இக்குருத்துவக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் இந்நாளை கழிக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும், சமாதானத்தின் செய்தியையே யாழ். மக்களுக்குத் தாய் கொண்டு வந்ததாகவும் குறிப்பிட்டார். தமது வருகையை முன்னிட்டு குருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கு மறுநாள் (26. 3. 90) விடுமுறையென பிரகடனப்படுத்திய தூதுவர் மதிய உணவின் பின் பசுமையான நினைவுகளுடன் குருத்துவக்கல்லூரியில்ருந்து விடைபெற்றுக் கொண்டார்.

சகோ. அருள்நேசன்,
புனித சவேரியார்
குருத்துவக்கல்லூரி
யாழ்ப்பாணம்.

## இராணுவத்திற்கு கத். உதவி

இந்தோனேசியாவில் விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் கிழக்கு தீமோர் மாகாணத்தில் குடிமக்களின் முன்னேற்றத்திற்காக அம்மாகாண அரசுடனும் இந்தோனேசிய இராணுவப் படைகளுடனும் பிலி மறை மாவட்டம் இணைந்து பணியாற்றும் என்று அம்மாவட்ட ஆயர் காரியோஸ் தெரிவித்தார். கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றும் வகையில் இராணுவப் படைகள் செயலாற்றினால் அவற்றிற்கு கிழக்குதீமோரின் கத்தோலிக்க திருச்சபை எல்லாவகையிலும் உதவி செய்யும் என்றும் பாதுகாப்புக்கென பிலிக்கு வந்திருந்த புதிய இராணுவத்தினரிடம் கூறினார் ஆயர். துப்பாக்கிகளைப் பயன் படுத்தாமல் உங்களுடைய நட்பை மக்களிடம் காட்ட முயன்றால் அவர்களின் அன்பை நீங்கள் கண்டிப்பாய்ப் பெறுவீர்கள் என்று 2000 இராணுவவீரர்கள் முன்னிலையில் பிலி மறை மாவட்ட ஆயர் கூறினார்.

### 1ஆம் வருட நினைவு



| | |
|---|---|
| இன்னாசிமுத்து | றோசமுத்து |
| மண்ணில்: | விண்ணில்: |

### 6ஆம் ஆண்டு நினைவு



மோசேஸ் சூசைப்பிள்ளை
இம்மனுவேல்
(இலங்கைப் பொலிஸ்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 26-04-1936 | 22-04-1984 |

இவரின் ஆன்ம சாந்திக்காக 22-4-1990 ஞாயிற்றுக்கிழமை காலை 6-00 மணிக்கு இளவாலை, புனித அன்னம்மாள் தேவாலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்

### 1ஆம் ஆண்டு நினைவு



நீக்கிலாப்பிள்ளை றோசலீன்
(அன்னம்)

மறைவு:
21-4-89

இவரது ஆன்ம சாந்திக்காக 21-4-90 மாலை 6.30 மணிக்கு புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் துயருறும்

பங்குமக்களும்.

இன்னாசிமுத்து றோசமுத்து
மண்ணில்: விண்ணில்:
30-01-1903 21-04-1989

பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.
இவரின் பிரிவால் துயருறும்
தாய், சகோதரன் லோறன்ஸ்,
மனைவி, பிள்ளைகள்.
A/86 இளவாலை.

ஒப்புக்கொடுக்கப்படும்.
இவரது பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
A/84

## 10வது ஆண்டு நினைவு



செபஸ்ரியாம்பிள்ளை
அனற் கொண்சலற்றா
அன்னையின் மடியில்:
1974–9–25
ஆண்டவன் அடியில்:
1980–4–25

பாலகயேசுவே! எங்கள் ஆருயிர் அனற் கொண்சலற்றாவை உம்மிடம் அழைத்தீர். இவர் உமது இரக்கத்தால் உயிர்ப்பின் மகிமையில் பங்கு கொள்ள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

இவவின் ஆன்ம சாந்திக்காக இளவாலை, புனித அன்னம்மாள் ஆலயத்தில் 25 ஆம் திகதி காலை 6 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி இவவின் ஆன்ம சாந்திக்காக பிராத்திக்குமாறு கனிவுடன் வேண்டுகின்றோம்.

இவவின் பிரிவால் துயருறும்
அன்பின் அம்மா, அக்காமார்,
அண்ணன்மார், உற்றார்
உறவினர்கள்,' நண்பர்கள்.
உடையார் ஒழுங்கை,
இளவாலை. A/82

''வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை''

அன்பான தந்தையே!

உம் சித்தப்படி இவ்வுலகில் வாழ்ந்து என்றும் உமக்கு நிறைவாய் சான்று பகர்ந்த இன்னாசிமுத்து றோசமுத்து என்ற உம் அடியாளுக்கு வான் வீட்டில் முடிவில்லா பேரின் பத்தை அளித்தருளும்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 21-04-1990 சனிக்கிழமை காலை 6-15 மணிக்கு நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி நிறைவேற்றப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்'
நாரந்தனை A/79

## மரண ஞாபக அறிவித்தல்

ஏப்ரல் 22.

யுஸ்ரெலா யஸ்மின் கிறிஸ்ரியன்
6ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி.
அரியாலை, புனித யூதாததேயு ஆலயம்- மாலை 5 மணி.
பரிசுத்த மரியன்னை பேராலயம். காலை 6-30 மணி.

A/83.

ஏப்ரல் 24.

திருமதி மரிய சவேரியா மங்கையர்க்கரசி சந்திரசேகரா
1ஆம் வருட நினைவுத் திருப்பலி.
மாதகல், புனித அந்தோனியார் ஆலயம், பி. ப 5-00 மணி.

ஏப்ரல் 27.

அருட்செல்வி M. கார்மலிண்டா (மேரிமாக்)
1ஆம் ஆண்டு இரங்கல் திருப்பலி.
நவாலி சென். பீற்றேஸ் தேவாலயம், மாலை 4-00

A/81

பாதுகாவலன்
PATHUKAVALAN

# பாடசாலை மறைக்கல்வி வாழ்க்கைக்கு போதுமானதல்ல

மறையாசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று மார்ச் 4 ஆம் திகதி ஞாயிறன்று மயிலை புனித காணிக்கை மாதா பங்கு மனையில் நடைபெற்றது. கருத்தரங்கைச் சிறப்பித்து கருத்துரைகளை வழங்கவென மறையாசிரியர் திரு. கி, சா. பங்கிராஸ் அவர்களும், அருட்திரு. டேவிட் அடிகளாரும் வருகை தந்தனர். அருட்திரு. டேவிட் அடிகளார் தமதுரையில் ஒரு மாணவன் கிறிஸ்தவமதிப்பீட்டினைக் கொண்டு வாழ வேண்டுமாயின் அவனுக்கு மறைக்கல்வி புகட்டப்படவேண்டியது மிக மிக அவசியம். சாதாரணமாக ஒரு மாணவன் கணிதத்திலோ, விஞ்ஞானத்திலோ பெரிய அறிவாளியாய் இருந்து அவனது மூளை வளர்ச்சிபெற்றிருந்தாலும், அவனது இதயம் வளரவில்லையென்று சொன்னால் அவன் வாழப்போகும் வாழ்க்கை அர்த்தம் அற்றது. எனவே தான் இன்றைய காலகட்டத்தில், கிறிஸ்தவ உருவாக்கத்தில் மறையாசிரியர்களின் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்ததெனக் கூறினார். மறையாசிரியர் கி. சா. பங்கிராஸ் தமதுரையில் மறைக்கல்வியின் முக்கிய நோக்கம் பற்றி விளங்கக் கூறினார். மறைக்கல்வியைப் போதிப்பவர்கள் முதலில் தங்களைத் தாங்களே தயார்படுத்திக் கொள்ளவேண்டும். தங்களது நடைமுறை வாழ்க்கையினை ஆராய்ந்து, சீர்தூக்கிப்பார்த்து மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக வாழும்போது அதுவே ஒரு மாணவனுக்குப் படிப்பினையாகிவிடுகின்றது. தற்போது பாடசாலைகளில் மறைக்கல்விக்கென ஒதுக்கப்படும் 80 நிமிடங்கள் வாழ்க்கைக்குத் தேவையான மறையறிவை மாணவர்கள் பெறுவதற்குப் போதுமானதல்ல. எனவே தான் பங்குமட்டங்களில் மாணவருக்கு மறைக்கல்வி வகுப்புக்கள் நடாத்தப்படவேண்டும் என கூறினார்.

தகவல்:- A. மேரி புஷ்பராணி

## எண்ணூறு சேனையாரின் தவக்கால திருவிழிப்பு

மன்னார் மறைமாவட்டத்தின் சகல பங்குகளிலுமிருந்து ஒன்று கூடிய மரியாயின்சேனை அங்கத்தினர் சுமார் எண்ணூறு பேர் தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் தவக்கால திருவிழிப்பு ஆராதனை நடத்தினர்.

மார்ச் 18 ஆம் திகதி சனிக்கிழமை முழுநாளும் மரியன்னை தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. ஆலயத்திற்குள்ளும், ஆலயவளவிலும், ஊர்மனையெங்கும் மரியாயின் சேனை அங்கத்தினர் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

மறைமாவட்டத்தின் சகல பகுதிகளிலுமிருந்து எழுச்சியுடன் தாழ்வுபாட்டில் ஒன்றுகூடியிருந்த 800 அங்கத்தினரையும் பங்குத்தந்தை வரவேற்றார்.

"உலகின் எந்த மூலை முடக்கிற்கும் செல்லக்கூடிய வாய்ப்பு மரியாயின்சேனை அங்கத்தினருக்கு உண்டு என்றும் இதனைப் பயன்படுத்தி எல்லாச் சூழ்நிலைகளிலும் தங்கள் அப்போஸ்தலிக்கப் பணியை ஆர்வமுடன் செய்ய வேண்டும் என" அருட்திரு. இம்மானுவேல் இயேசுதாசன் ஒ. எம். ஐ. அடிகள் வலியுறுத்தினார்.

மரியாயின்சேனை மறைவட்ட இயக்குநரான அருட்திரு. பே. அருள்நாதன் O. M. I. அடிகள் "கெத்சேமனித் தோட்டத்திற்குப் போவோம்" என்ற தலைப்பில் தியான உரை வழங்கினார்.

சேனை இயக்குநர் மரியாயின் சேனையில் ஆண்கள் சேர்ந்து கொள்வது அருகி வருகிறது என்று கூறி வருகை தந்திருந்த வங்காலைப் பங்கின் சேனை வாலிபர்களைச் சுட்டிக்காட்டி இந்த வாலிபர்கள் ஏனைய வாலிபர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு என்றும் ஏனைய பங்குகளிலும் வாலிபர்களைச் சேர்த்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தகவல்:- ஜெகன்.

## கிறிஸ்தவ சபைகள் மனந்திரும்புதல்களை வற்புறுத்தவில்லை

அண்மையில் ஆந்திரப்பிரதேச கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் ஒன்று கூடிய போது பெருந்தொகையான மனந்திரும்புதல்களை தாம் விரும்பவில்லை எனத் தெரிவித்தனர். அரசியல் காரணங்களுக்காகவோ பிற நன்மைகளுக்காகவோ, மனந்திரும்புவது விரும்பத்தக்கதல்ல என்றும் தாம் மனந்திரும்பும்படி எவரையும் வற்புறுத்துவதில்லை என்றும் அவர்கள் பத்திரிகைக்கு விடுத்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை ஆட்சியிலிருந்த பல்வேறு அரசுகள் கிறிஸ்தவர்களின் உரிமைகளை மறுத்துவந்துள்ளதால் தாம் அவ்வுரிமைகளைப் பெறப் போராடவேண்டும் எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். கத்தோலிக்க ஆயரான அருளப்பா அரசு கத்தோலிக்க நிறுவனங்களுக்கு உதவியளித்து அவை சுதந்திரமாகச் செயற்பட வசதியளிக்க வேண்டுமெனக் கூறினார்.

## மட்டக்கலையில் புதிய பங்குமனை

11 ஆந் தேதி காலை 9. 30 மணியளவில் கண்டி ஆயர் அவர்கள் மட்டக்கலை புனித அந்தோனியார் கோவிலில் புதிதாக அமைந்துள்ள குருமனையை மங்கலக் குத்து விளக்கேற்றித் திறந்து வைத்தார். இவ்வைபவத்திற்கு இன, மத, பேதமின்றி தோட்ட உயர் அதிகாரிகள் திரு. ஜீவரட்ணம், திரு. குணசேகரா, இந்து சமயத்தலைவர் ஆகியோர் வருகைதந்து புதுமனை விழாவைச் சிறப்பித்தனர். இதில் அருட்தந்தை பாலராஜேந்திரம், அன்ரனி பெர்னாண்டோ. பங்குத்தந்தை பெனற் மெல்லவ ஆகியோரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

கண்டி மறைக்கல்வி நிலையத்தினரால் தொலைக்காட்சி மூலம் போதனைகளும், அறிவுரைகளும் வழங்கப்பட்டது.

## சாம்பியாவில் 2417 எயிட்ஸ்நோயாளர்

எயிட்ஸ் நோய் குறித்து ளர்கள் இடையேயான பணி

## முதலிடம்

இவ்வாரம் மொத்தம் 9150 பத்திரிகைகள் அச்சிடப்படுகின்றன. ஐநூறு பத்திரிகைகளை வாரம் தோறும் விற்பனை செய்யும் யாழ். புனித யாகப்பர் ஆலயம் பங்கு ரீதியாக பாதுகாவலன் வாசகர்களை ஊக்குவிப்பதில் முதலாம் இடத்தில் உள்ளது.

## கருச்சிதைவுக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுற்ற 3 மாதங்களுக்குக் கருக் கலைப்பு செய்து கொள்வதற்கு எல்லாப் பெண்களுக்கும் உரிமை கொடுப்பதுடன் கருமுதிர்ந்த காலத்தில் கூடத் தாயின் உடல் நிலையை முன்

## இளவாலையில்,...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கன்னியர்கள், துறவற சபையினர் புடை சூழ இளவாலை மறைவட்டார பொதுநிலையினர் அனைவரும் தங்கள் கைகளில் "வெண்மஞ்சள்" கொடிகளை கை தூக்கி ஆட்டி பெருமகிழ்வுடன் வரவேற்றனர்.

ஆலய நுழைவாயிலில் பங்குத்தந்தை அருட்திரு. M. T. பற்றிக் அவர்கள் மாலை சூட்டி ஆலயத்தினுள் தூதுவரை வரவேற்றார்.

திருத்தந்தையின் தூதுவர் "பேரருட்திரு. பிரான்சுவா பக்கே" அவர்களை இளவாலை மறைவட்டார குருமுதல்வர்

இளவாலை 'மறைவட்டம்' அவருக்கு தமிழ் கலாச்சாரத்திற்கமைய அளித்த பல்வேறு அன்பளிப்புகளுக்கிடையே புனித "ஹென்றி அரசர்" கல்லூரி மாணவர்கள் சார்பில் செல்வன் நியூட்டன் சவரிப்பிள்ளை பாராட்டுரை வழங்க எமது பங்குத்தந்தை அருள்திரு. மைக்கல் T. பற்றிக் அவர்கள் மறைவட்டத்தின் சார்பாக நன்றியுரை கூறினார்.

தொடர்ந்து இளவாலை தி. கு. க. மடத்தில் அவருக்கு தமிழர் பண்பாட்டின்படி வரவேற்பு உபசாரமும், தேநீர் விருந்தும் அளித்து கௌரவிக்கப்பட்டார்.

இது இளவாலை வட்டத்திற்கு ஒரு பெருமை சார்ந்த

# சாம்பியாவில் 2417 எயிட்ஸ் நோயாளர்

எயிட்ஸ் நோய் குறித்து விழிப்புணர்வை மக்களிடையே ஊக்குவிக்கவும், எயிட்ஸ் நோயாளிகளுக்கும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கும் போதிய உதவிகளை வழங்கவும் அரசைத் தூண்டுவதில் சாம்பியாத் தளத்திருச்சபை தன்னால் இயன்ற அனைத்தையும் மேற்கொண்டு வருவதாக அந்நாட்டின் ஆயர் டெனீம் டீ பொன் உரைத்தார். 2 ஆண்டுகளுக்கு முன்னர் எயிட்ஸ் நோய் குறித்த மேய்ப்புப் பணி சுற்றறிக்கையை வெளியிட்ட அந்நாட்டு ஆயர்கள் தற்போது செயல்முறைத் திட்டங்களை உருவாக்குவதில் ஈடுபட்டு வருவதாக ஆயர் கூறினார். எயிட்ஸ் நோயாளர்கள் இடையேயான பணியின்போது மிகவும் பரிவிரக்கத்துடன் செயற்பட வேண்டியது மிகவும் அவசியம் என்றார் ஆயர். சாம்பியாத் தளத் திருச்சபை எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவதிலும், எயிட்ஸ் நோயாளர்களின் குடும்பங்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்குபவர்களை ஊக்குவிப்பதிலும் ஈடுபட்டு வருகிறது. W. H. O. எனும் உலக நலவாழ்வு நிறுவனத்தின் கூற்றுப்படி 1979-1989 ஒக்டோபர் 29ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் சாம்பியாவில் 2417 பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

தற்கு எல்லாப் பெண்களுக்கும் உரிமை கொடுப்பதுடன் கரு முதிர்ந்த காலத்தில் கூடத் தாயின் உடல் நிலையை முன்னிட்டுக் கருக்கலைப்பு செய்து கொள்வதற்கு இச்சட்டம் சலுகை அளிக்கிறது.

## குருக்களுக்கு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது என்று ஏசியா நியூஸ் செய்தி அறிக்கை உரைத்தது.

வத்திக்கான் தாய்லாந்துடனான அரசியல் உறவுகளை முறித்துக் கொள்ள வேண்டும் என்ற கம்யூனிசக் கட்சி ஏட்டின் கூற்றை சுட்டிக்காட்டி திருப்பீடம் சீனாவுடனான சாதாரண உறவுகளை வளர்க்க விரும்பினால் மத விவகாரம் உட்பட சீனாவின் உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது என அறிவித்துள்ளது. 1957 இல் சீனா வத்திக்கானுடனான உறவுகளை முறித்துக்கொண்டது.

"பேரருட்திரு. பிரான்சுவா பக்கே" அவர்களை இளவாலை மறைவட்டார குருமுதல்வர் அருள்திரு. றெஜி றாஜேஸ்வரன் ஆங்கிலத்திலும், தமிழிலும் வரவேற்புரை வழங்கி வரவேற்றார்.

தூதுவர் தமதுரையில் "நீங்கள் அளித்த நீண்டவரவேற்பு எனக்கல்ல எங்கள் திருச்சபைக்கே" அத்தோடு "சமாதானத்தை உங்களுக்கு வாழ்த்தாக அளிக்கிறேன்." என்றும், "நீங்கள் அளித்த வரவேற்பு எனக்கல்ல- என்னை அனுப்பிய 'திருத்தந்தைக்கே', உடமையாகும். நான் இந்தச் செய்தியை திருத்தந்தைக்கு அனுப்பிவைப்பேன்." என்றார்

மேலும் தமதுரையில் பிரிவினை, சகோதரர்களுக்கும் எமக்குமுள்ள உறவு மேலும் வலுப்படுத்தப்பட்டு ஐக்கியப் படுத்தப்பட வேண்டுமென்று கூறினார்.

இது இளவாலை வட்டத்திற்கு ஒரு பெருமை சார்ந்த நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை.

அ. கலிஸ்ரா.
சிரோன் நிர்மலா

## சீனத் திருச்சபை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார் என பூக்கான் செய்தி நிறுவனம் கூறுகிறது. சீனாவில் மத உரிமைகள் பற்றிய திட்டம் தூர நோக்குத் திறனுடையது, அசைக்க முடியாதது என்று கூறும் அதே வேளை அது சூழ்நிலைக்குத் தக்கவாறு மாற்ற முடியாதது என்று றென் கூறியதாக யூக்கான் மேலும் கூறுகிறது. ஹொங் கொங்கின் வருங்கால அரசு எல்லாவகையிலும் உள்நாட்டுத் திருச்சபையின் பணிகளைத் தடைசெய்ய முயற்சிக்காது என்று றென் கூறியதாக யூக்கான் மேலும் கூறுகிறது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் ஷேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

**உன்னைமீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**